# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
செப்டெம்பர் – அக்டோபர் 2024
ஆண்டு 5 ▲ இதழ் 02
விலை 250/-



இம்மாத ஆளுமை

## ஜே.எம். பாஸித்

# கருவாகினையே

அமிழ்து கருவுற்றதால்
உயிர் தோன்றிற்று.
உயிர் கருவுற்றதில்
உயிர் மெய்யானது
உயிரும் மெய்யும்
உருப்பெற்று தமிழானது

வல்லினமும்
மெல்லினமும்
இடையினமும்
தமிழின் குழந்தைகளாயின
அக்குழந்தைகளுக்கு
நான் உயிரானேன்
உருவானேன்
கருவானேன்
தருவேன் நான் தமிழ்

அறிவிப்பாளினி மதீரா




# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
செப்டெம்பர் - அக்டோபர்– 2024
ஆண்டு 5 ▲ இதழ் 02

பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா
Chief Editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்
Hon. editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு :
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

வடிவமைப்பு:
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamizh.kalasam@gmail.com

The Editor of “Muththamizh kalasam”,
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

*அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!*

*இந்த செப்டெம்பர் எட்டாந்திகதி உலக எழுத்தறிவு தினம் கொண்டாடப் படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை எழுத்தறிவு 92% சதவிகிதமாகவும் தெற்காசியாவிலேயே முதன்மை பெற்றும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.*

*கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடாக இலங்கை திகழ்வது மகிழ்ச்சிக்குரியதே!*

*ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு கல்வி என்பது இன்றியமையாத முதுகெலும்பாகும். ஆகவே நம் வருங்கால செல்வங்களுக்கு கல்வியறிவை ஊட்டி நம் நாட்டு மக்களின் எழுத்தறிவு விகிதத்தை இன்னும் அதி கரிப்போம்.*

*அடுத்த மாதம் முதலாம் திகதி இலங்கையில் சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இதைக் கொண்டாடுவதை விட, சிறுவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே முக்கியமானது என்பதை அனைவரும் நினைவில் கொள்ளல் வேண்டும். தெரிந்தும் தெரியாமலும் அவர்களுக்கு நடந்தேறும் அக்கிரமங்கள், துஷ்பிரயோகங்கள் களையப்படல் வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாய் இருப்போம். அது போதும் ஒரு சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப, எதிர்காலத்தை ஒளிமயமாக மாற்றக் காத்தி ருக்கும் நம் தலைமுறையின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, சிறந்த முறையில் வழிகாட்டுவோம்.*

நன்றி

**வ.ஃபிரா வ.ஃபி**

*(பிரதம ஆசிரியர்)*

# தனிமை



**கோ.தனுசன்**
மட்டக்களப்பு,
இலங்கை

உறவாக வந்ததெல்லாம்
உயிராக இருந்திடுமா?
உயிராக இருப்பதெல்லாம்
பிரியாமல் இருந்திடுமா?

புரியாத வார்த்தைகளில்
புதினங்கள் வரைகின்றேன்.
புலம்பிய தத்துவத்தை
புலனத்தில் பகிர்கின்றேன்.

தனிமையில் வந்தவர்கள்
தனிமையில் இருப்பதில்லை.
துணையாக இருப்பவர்கள்
துன்பத்தில் கலப்பதில்லை.

உணர்வுகளால் உள்ளங்கள்
உடைந்துதான் போவதுண்டு
கண்ணீரால் கவலைகள்
கண்விட்டுப் போவதுண்டு
எவருமில்லா உலகத்தை
எங்கெங்கோ தேடுகிறேன்.
தேவனவன் தந்துவிட்டால்
தேடலினை முடித்திடுவேன்

வாடையிலே வாடிவாடி
வாழ்க்கையை வெறுத்துவிட்டேன்
போனவரைத் தேடியினி
போவதில்லை முடிவெடுத்தேன்

தனிமையிலே இனிமைகாண
தரணியெங்கும்
அலைந்துவிட்டேன்
போதிமர நிழலினிலே
புத்தனாக அமர்ந்துவிட்டேன்

உறவுகளை துறந்தினிமேல்
நூல்களையே நாடிவிட்டேன்
புதிதான உலகத்தை
தேடியின்று சேர்ந்துவிட்டேன்

# விடிகின்ற நாள் வருமா?

எஸ். ஃபாயிஸா அலி



எரிகின்ற எம் காசாவும்
விடிகின்ற அந்நன்னாள் அருள்வாயென
உருகியுருகி இருகரமேந்துகிறேன்
உரைத்திடுவாய் தண் சொல் என்றப்பே..

வரைபடத்தில் இல்லாததொரு தேசம்
வன்மத்தாலவர் தோற்றுவித்தார்.
தரையெல்லாம் குருதி வழிய எம்
தாய் நாட்டைப் பறித்தெடுத்தார்

மாறிமாறிக் குண்டு மழை
மஸ்ஜித், பள்ளி, மருத்துவமனை
வேறுபாடின்றி எல்லாம் சிதைத்தார்
வேதனைகளை மட்டுமே
நமக்குள் விதைத்தார்.

வயது, பால்பேதமின்றி
வக்கிரக் கொலைகளவர் புரிந்தார்
வயிற்றில் வளரும் சிசுவையுமே
விட்டு விடாமல் கொன்றொழித்தார்.

கல்வி, செல்வம் தேகாரோக்கியம்..
களிப்புடன் காதல் நிறை இல்லறம்
இல்லாமலாக்கியே இன்பந்துடைத்தார்
இடர்நிறை முகாம்களிலே எமை யடைத்தார்.

காற்றுமில்லாக் கதவுமில்லாக்
குருதி பிசுபிசுக்கும் கூடாரங்களில் நாமின்று..
நேற்றிருந்த சொந்த வீடும்
சுகந்தந்த வாழ்வும் வெறுங் கனவாச்சே!

ஷாம்தேசத்திற்கு நற்செய்தி யுண்டென்ற
உன்சத்திய வாக்கை நம்புகின்றேன்
நானிங்கு வாழுமிக் காலமேயந்த
நற்செய்தி உணரச் செய் ரஹ்மானே!

# செம்பருத்தி

## -சிறுகதை

**பாத்திமா றிப்கா-மீராநகர்**



நெய்தல் நிலத்தில் இயற்கை அழகில் இயல் பான வாழ்க்கை வாழ்ந்தவள் கயல்விழி. நெசவு நெய்தலை கைத்தொழிலாக கொண்டு வாழ்ந்த கயலின் குடும்பத்தி னர் நடுத்தர வர்க்கத்தினரே!

ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டா னவர்கள் இவர்கள். சிறுகைத் தொழிலாக ஆரம்பித்து இன்று நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இதிலே வேலை செய்கிறார்கள்.

கயல் உயர்தரத்தில் கற்றாலும் போதும் என்ற நிலை இக் குடும்பத்தி னருக்கு இருந்தது. கயலுக்கு திரும ணம் செய்து வைக்க ஒரு பையனைப் பார்த்தார்கள். அவனது தந்தை நெய் தல் நிலத்தான்.

நெசவும் நெய்பவர் மகன் என்ப தனால் முல்லை நிலத்தில் பிறந்து வளர்ந்த சரணை மாப்பிள்ளை ஆக் கினார்கள். இருவருக்கும் திருமண மும் நடைபெற்றது. இல்வாழ்வும் தொடங்கியது.

இவர்களுக்கு இரு வருடங்களில் பின்னரே ராஜா, ரவி என இரட்டைக் குழந்தைகள் அதுவும் ஆண் பிள்ளைகளாக

பிறந்தார்கள். இவர்களை நன்றாகப் படிக்க வைத்து, என்ஜினியராக்கி திருமணமும் செய்து வைத்தார்கள்.

கயல்விழிக்கும் அவள் கணவருக்கும் அனைத்துப் பொருத்தமும் இருந்தாலும், மனப்பொருத்தமும் அதிகமாக இருந்தது. அப்படி இருந்தும் தினமும் தன் கணவருடன் முரண்படுவது வழக்கமாகவே இருந்தது.

இதனால் வெளிநாட்டில் இருக்கும் தன் பிள்ளைகளிடம் தாறுமாறாக உங்களுடைய அப்பா எனது மனம் நோகும்படி நடந்து கொள்ளுகிறார் என அடிக்கடி கூறிக் கொண்டே இருப்பாள் கயல்விழி.

தந்தையிடம் 'அம்மா அடிக்கடி உங்களைப்பற்றி இப்படி எல்லாம் குறை கூறுகிறார். எங்களுடன் வெளிநாட்டில் சில காலம் வந்து இருங்களேன்! அவவும் ஆசைப் படுகிறாதானே' என மூத்த பையன் ராஜா கூறினார்.

இப்படியெல்லாம் ஏன் கயல் செய்கின்றாள் என்று யோசித்த சரண், இதை எல்லாம் கேட்டு விட்டு 'உங்க விருப்பப்படியே செய்து கொள்ளுங்கள்' எனக் கூறி தொலை பேசியை துண்டித்துக் கொண்டார். துண்டித்தது தொலைபேசியை மட்டும் இல்லை. மகன்களின் பாசத்தையும் மனைவியின் பந்தத்தையும்தான்.

சில மாதங்கள் கழிந்தன. கணவன் மனைவி இருவருக்கும் இடையில் எந்தத் தொடர்புமே இல்லாமலே ஒரே வீட்டிலே வாழ்ந்தார்கள்.

இந்த மனமுறிவுக்கு காரணம் சரணால் எழுதப்பட்ட டைரியை கயல் படித்ததுதான். கயலுக்கு வானம் இடிந்து தலை மீது விழுந் தது போல இருந்தது. அந்த டைரியில் அவருடைய பழைய காதலியான செம்பருத்தியைப் பற் றியே எழுதி இருந்தது.

காலங்கள் ஓடினாலும் காலத்தினாலே அழியாத காதலியை சுமந்து வாழும் சரணுடைய மனமும் குணமும் அன்பும் பெரிதாக இருந்தது. செம்பருத்தி மீது வைத்திருந்த காதல், மட்டும் அல்லாது இன்று வரைக்கும் அவளுடன் வாழும் நினைவு பற்றியும் எழுதி இருந்தது. காலத்தின் கட்டளை செம்பருத்தியை பிரிந்து கயல் விழியை திருமணம் செய்ய வேண்டியிருந்ததாகவும், 'எனது பெற்றோரின் பேச்சை என்னால் மீற முடியவில்லை' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. காரணம் சரண் தாய்க்கு ஒரே பையன் என்பது தான்.

பின் கயலை திருமணம் முடித்தேன். உடனே என்னால் என் காதலைப் பற்றி சொல்ல முடியவில்லை. காரணம், கயல் கொஞ்சம் அவசரக்காரி. இந்த வியத்தை ஏற்றுக்கொள்ள மாட்டாள் என்பத

னாலும், எங்களுக்கு இரட்டை ஆண் குழந்தை பிறந்ததனாலும் நான் சொல்லாமலே மறைக்கவேண்டி வந்தது' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அன்று வெள்ளிக்கிழமை சரணை தேடி வீட்டுக்கு வந்த நண்பன் அஷோக்கிடம் செம்பருத்தியைப் பற்றி விசாரித்தாள் கயல்விழி. அதற்கு நண்பன் அசோக் கூறி னான். படிக்கும் காலத்திலே காதலித்தார்கள். செம்பருத்தியின் குடும்பம் அந்த நேரம் கஸ்டத்தில் இருந்தது. நோயில் விழுந்த தந்தை, உழைப்பே இல்லாத குடும்பநிலை. வருமானம் இல்லாததால் வீட் டுக்கு வீடு போய் பாடம் படித்துக் கொடுத்தாள் செம்பருத்தி. அதிலே வரும் வருமானத்தினால் ஆறு பேரும் மூன்று வேளை வயிற்றைக் கழுவி வந்தார்கள்.

சரண் அவ்வப்போது செம்பருத்தி வீட்டுக்கு போய் அவளது தந்தையை பார்ப்பான். செம்பருத்தியின் தாய் தந்தை இருவரும் செம்பருத்திக்கு சரண் வாழ்க்கை கொடுப்பார் என உறுதியாக நம்பி இருந்தார்கள்.

அவசரமாக கயலின் திருமணப் பேச்சு வீட்டில் அடிபட்டது. இது பற்றி செம்பருத்தியிடம் கூறினான் சரண்.

'எனக்கு நீயும் வேண்டும்; என் பெற்றோரும் வேண்டும். என்ன முடிவு எடுப்பதென்று தெரியல' என செம்பருத்தியிடம் மனம் உடைந்தவனாக பேசிக் கொண்டு இருந்தான். பிறகு அசோக்கிடம் பேசியிருக்கிறான் 'இருமாதங்கள் கழிந்ததும் திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டும் என கயல் குடும்பத்தினர் எங்க வீட்டுக்கு வந்தார்கள். என்னுடைய முடிவை கேட்காமலே அடுத்தவாரம் திரு ம ணத்தை முடிப்போம் எனக் கூறி அவர்களை அனுப்பிவைத்தார்கள். என்மனம் முகம் பார்க்கும் கண் ணாடியை போல் சுக்குநூறாக உடைந்தது.

என்னை சந்திக்க வழமையான இடத்திற்கு செம்பருத்தி வந்தி ருந்தாள். நான் செம்பருத் தியை பார்த்து நாம் இருவரும் ரிஜிஸ்டர் மெரேஜ் பண்ணுவோம் எனக் கேட்டேன். மௌனமாக இருந்த செம்பருத்தி, அதற்கு அவசியமில்லை என கூறிவிட்டு எழுந்து சென்றாள். என்ன செய் வதன்று புரியாமல் அவ்விடத்திலே நின்றேன்' என்றான் சரண்.

அடுத்தநாள் காலை தன் தாயா ரிடம் தன் நண்பனின் வீட்டுக்கு திருமணத்திற்கு போவதாக கூறி தனக்கு தெரிந்த பழக்கமான கங்கா முதியோர் இல்லத்தில் உதவிற்காக ஒரு வாரம் தங்கி இருந்தாள், சரணுடைய திருமணம் முடியும் வரையும் சரணின் நண்பன் மூல மாக அனைத்தையும் தெரிந்து கொண்டாள். அதன்பிறகு அவ் வூரை விட்டு நிரந்தரமாக கங்கா முதியோர்

இல்லத்தின் அலுவலகத்தில் போய் சேர்ந்து மாதாமாதம் பணம் அனுப்பிக் கொண்டு இருந்தாள். குடும்பச் செலவுக்காக. இவை அனைத்துமே சரணுடைய டயரியில் எழுதப்பட்டிருந்தது. கண்கலங்கிய கயல் படித்தும் விளங்காதவாறு டைரியை உரிய இடத்தில் வைத்தாள்.

இளமையைத் தொலைத்த செம்பருத்திக்கு தன் வாழ்வின் பாதியை கொடுக்க நினைத்த கயல் தன் கணவருடன் வேண்டும் என்றே சண்டை போட்டு வெளிநாட்டுக்கு தன் மக்களுடன் போய் பேரப் பிள்ளைகளுடன் வாழ நினைத்தாள்.

கயலின் விருப்பபடி எல்லாமே நடந்தது இருவருக்கும் மனக் கசப்பை ஏற்படுத்திக் கொண்டாள். கயல் வெளிநாட்டுக்கு போய் விட்டாள். சரண் மன விரக்தியில் வீட்டிக்குள்ளே இருந்தார். நாள் வாரம் ஆகியது. வாரம் மாதமாகியது. வேறு வழியின்றி அஷோக்கின் உதவியுடன் கங்கா முதியோர் இல் லத்திற்கு போய்ச் சேர்ந்தார்.

செம்பருத்தி அங்கு வருபவர் களுடைய விபரங்களை கேட்டு எழுதிக் கொண்டு இருந்தாள். அடுத்து அடையாள அட்டையை தரும்படி கேட்க, சரணும் கொடுத் தார். பெயரை பார்த்த செம்பருத்தி பின்பக்கமாக பார்த்துவிட்டு முன் பக்கம் பார்த்தாள்

சரணைக் கண்டதும் எழுந்து நின்றாள். முகக்கவசம் அணிந்திருந் ததால், செம்பருத்தியின் முகம் விளங்கவில்லை. அதன் பின் முகக் கவசத்தை கழற்றினாள். சரணுக்கு வியர்த்துக்கொட்டியது. நண்பன் அஷோக்கிடம் செம்பருத்தியிடம் சேர்க்கச் சொல்லி, ஒரு கடிதம் கொடுத்திருந்தாள் கயல்.

அதனை வாங்கிப்படித்த செம் பருத்தி தன் முடிவை மாற்றவே இல்லை. ‘இளமையில் இழந்தேன் காதலை. நடுவயதில் இழந்தேன் வாழ்க்கையை. முதுமையில் இழக் கக்கூடாது நிம்மதியை’ எனக் கூறி நல்லதொரு நண்பியாக சரணுடன் இருந்து கொண்டாள்.

செம்பருத்தியின்உயர்ந்த குணத்தை அறிந்த கயல் நாட்டுக்கு உடனே திரும்பி வந்தாள். அவர்களுடைய தூய்மையான அன்பே பெரிது என நினைத்து தன் கணவரான சரணிடம் கயல் நடந்த அனைத் தையும் கூறி மன்னிப்பும் கேட்க, இயல்பான வாழ்க்கைக்கு இருவரும் திரும்பினார்கள். செம்பருத்தியின் காதல் மெழுகுவர்த்தியாய் உருகி விட்டாலும் தியாகத்தின் ஜோதி அதில் தெரிந்தது.

(முற்றும்)

# கடற்கரைக் கா(சா)ட்சிகள்

இறந்து கரையொதுங்கிய
கடலாமையின்  தலையைச்
சுற்றியவாறு நெகிழிப்பை
தீர்ந்த பின்பும் அலையில்
ஆடிக் கொண்டிருக்கின்றன
காலி மதுபுட்டிகள்

கெட்டுப்போன சாம்பார்
நெகிழிப் பொட்டலங்களை
முகர்ந்துப் பார்க்கும் கயல்கள்

கழிவுக்குப்பைகளால்
மூடிக்கிடக்கும் வீட்டை விட்டு
வெளியேற முடியாமல்
தவிக்கும் நண்டுகள்

உப்புக் காற்றை
மீறிய துர்நாற்றம்
சீற்றத்துடன் அலைகள்
உள்ளதாகவும்
யாரும் கடலில்
குளிக்க வேண்டாமென
காவல்துறையின்
எச்சரிக்கை அறிவிப்பு

இது கடலின் அறச்சீற்றமென
யாரும் அறியாததே
ஆகப் பெருந்துயரம்

**-பா.சிவகுமார்**

# தீயினுள் திறல்

தீயது கக்கிடும்
வெப்பம் அருந்தி...
திறலது கொண்டிடும்
இரும்பாம் பெண்களும்...

திங்களாய் ஒளிர்விடும்
வதனமும் பொருந்தி...
திலகமாய் விளங்குவர்
ஒவ்வோர் அகத்திலும்...

கஷ்டங்கள் கவலைகள்
துன்பங்கள் எல்லாம்...
கட்டியே மனப்பைக்குள்
மங்கையர் புதைப்பர்...

கந்தைகள் மறைத்திடும்
ஊசியாய் நின்று...
கண்களில் தோன்றிடும்
கண்ணீரும் மறைப்பர்...

பெண்மை என்பது
பெரும் சக்தியே...
பெண்களின் பெருமை
அறிந்தவர் சித்தியே...



**பஸ்லா பர்ஸான்**
காத்தான்குடி



# நடைமுறைக் கல்வியில் அனுபவமே சிறந்த ஆசான்

'கல்வியை ஆதாரமாகக் கொண்டுதான் ஒரு தேசம் சகல துறைகளிலும் முன்னேற முடியும்' என்ற எண்ணப்பாட்டின் அடிப்படையிலேயே வையகத் தின் எல்லா நாடுகளும் இன்றைய போட்டிகரமான சூழலில் வெற்றி மகுடத்தை சூடி வருகின்றன. ஒவ்வொரு மானிடரும் உடல்நலம், உளநலம் இணைந்த இன்பகரமான வாழ்க்கை வாழ்ந்திடவும், உலக சமுதாய முன்னேற்ற பாதையில் செல்வதற்கும் கல்வி தத்துவத்தின் அடிப்படையில் அமைய வேண்டியது கட்டாயமான ஒன்றாகும்.

மாணவர்களை சிறந்த ஆளுமை மிக்க விருத்தியுள்ளவர்களாக மாற்றுவதில் 'ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்' இன்றியமை யாதவையாகும். கல்வியாளர்களும் பல வெவ்வேறான கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அதற்கமைய தத்துவங்களை வழங்குகின்ற பல்வேறு வகையிலான கோட்பாடுகளில் அண்மைக்காலத்தில் பிரசித்தியாக வளர்ச்சி அடைந்த ஒரு எண்ணக்கருவே 'பயன்பாட்டுவாதம்' ஆகும். அமெரிக்க தத்துவவியலாளரான 'ஜோன்டியூவி' இன் கருத்துக்களின் வெளிப்பாட்டினால் உருவாக்கம் பெற்ற இப்பயன்பாட்டுவாத கோட்பாடு இன்று கல்வியில் பல்வேறு வகையில் தாக்கம் செலுத்தி வருகின்றது என்றால் அது மிகையாகாது.

'இறுதியானது என்று ஒன்றுமில்லை. எதுவுமே நிரந்தரமற்றது. அறிவு என்பது வலியன்றி முடிவானதொன்றல்ல நிரந்தரம் என்று ஏதுமில்லை எல்லாமே காலம், இடம் என்பவற்றிற்கமைய மாற்றமடையும்' என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை சூழலில் தற்கால பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பயன்பாட்டுவாதம் பலவகையில் கல்வியில் தாக்கம் செலுத்தி வருகின்றது.

சமூகத்திற்கேற்றவாறு ஒவ்வொரு மாணவரையும் சிறந்த ஆளுமை உடையவர்களாக மாற்றுவதில் பயன்பாட்டுவாதம் அளப்பரிய தாக்கத்தை செலுத்தி வருகின்றமை மெய்ப்பிக்கத்தக்க ஒன்றாகும். மாணாக்கர்களுக்கு நிகழ்காலத்தேவை எதுவோ அதனை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தலையும் கற்றல் முறைமைகளையும் வழங்க வேண்டும்.

இலங்கையை பொறுத்தமட்டில் கடந்த சில காலங்களாக நவீன சமூகத்திற்கு ஏற்றவாறான மாணவர்களை உருவாக்குவதில் தடம்மாறி சென்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. 'பயன்பாட்டுவாத கல்வியின் மூலம், மாணவர்களின் நிகழ்கால தேவைக்கேற்ப கல்வி வழங்கப்பட வேண்டும்' இவ்வாறான தேவையை நிறைவேற்றாத கல்வி வீணானது என்பதே பயன்பாட்டுவாதமாகும்.

இதனால் இன்றைய நவீன உலகில் இக்கோட்பாடு முக்கியம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட அணுகி புதியதொரு சூழலில் நவீன தொழில் நுட்பத்திற்கு அமைய நடைமுறை சூழ்நிலைக்கேற்றவாறு இன்னல்களை அணுகி சிறப்பாற்றல் உள்ளவர்களாக பயன்பாட்டுவாதத்தை நடைமுறையுடன் ஒப் பிட்டு கல்வியை புகட்ட வேண்டும்.



உண்மையான அனுபவத்தினை வழங்குவதாக கல்



வியானது காணப்பட வேண்டும். வெறுமனே மாணவர்கள் அறிவுக் காக புத்தகங்களை பயன்படுத்தி புத்தக பூச்சி கள் ஆவதை தவிர்த்து அனுபவத்தோடு கூடிய கல்வியை வழங்க வேண்டும். அனுபவ ரீதியிலான கல்வியே வாழ்வியலுக்கு சிறப் பான விசையும் ஆகும். இவ்வாறே அனுபவத் தி ற்கு வித்திட்ட ஒன் றாக கல்வியியலில் பயன் பாட்டுவாதம் சிறப்பிடம் பெறுகிறது.

வெறுமனே கற்றலானது அறிவை பெறும் அல்லது அறிவைக் கொடுக்கும் செயன்முறையாகவும், பாடப்புத்தகத்திற்கோ பாடத்திற்கோ ஆசிரியருக்கோ முதலிடம் கொடுப்பதை தவிர்த்து மாறாக, மாணவர்களுக்கே முதலிடம் கொடுக்கும் ஒரு உயிர்ப்பான செயல்பாடாக இருக்க வேண்டும் எனவும், சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் போன்றவற்றிற்கு ஏற்றவாறான பயன்தரு பாடங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் இயல்பான தன்மை வாழ்க்கைக்கு பொருந்தக்கூடிய வாழ்நாள் நீடித்ததாக கல்வியில் கலைத்திட்டம் காணப்பட வேண்டும் என்பது பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையாக உள்ளது .

‘அனுபவமே சிறந்த ஆசான்’ என்பதற்கு அமைய கல்வி என்பது அனுபவத்தை புதுப்பிப்பதாக அமைய வேண்டும் என்ற ஜோன்டியூவின் கருத்துக்கு அமைய இன்று பாடசாலைகளில் கலந்துரையாடல்கள், குழு செயற்பாடுகள், பொருட்காட்சிகளை கண்டறிதல், பொருட்களை உருவாக்கல், கலைசார் வெளிப்பாடு போன்றவற்றை மாணவர்கள் அதிகம் விரும்புகின்றமையால், இதற்கேற்றவாறான கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்கி அவர்களை நவீன உலகிற்கு மாற்றியமைக்க வேண்டும் என பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்று உயர் நிலையில் சிறந்த மாணவர்களாக வலம் வருவது அவசியம். இவ்வாறு உயர்நிலைக்கு செல்ல பாடசாலை ஓர்

அடித்தளமாகத் திகழ்கிறது. மாணவர்களின் சிந்தனை ஆற்றலை தூண்டி, இயற்கையாக செயற்பட்டு வளர்ச்சி அடையும் இடமாகவும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் பாடசாலைகள் அமைகின்றன. பாடசாலையானது வெறுமனே பாடத்தை கற்பிப்பதோடு நில்லாமல் சமூக விடயங்களில் ஈடுபடுத்தி கூட்டுமுயற்சி, தொழிற்பாடு, தொடர்பாடல், பரஸ்பர நல் லெண்ணங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் அனுபவங்களை கற்றுக்கொடுப்பதன் மூலம் சமூகம் தொடர்பான சிறந்த அறிவைப் பெற்றுக் கொடுத்து ஆக்கபூர்வமான நவீன சிந்தனைகளை தோற்றுவிப்பதற்கும், சமூகத்துடன் முன்னேறி செல்வதற்கும் பாடசா லையானது திறமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என பயன்பாட்டுவாதம் குறிப்பிடுகின்றது.

பயன்பாட்டுவாத கல்வியின் மூலம் ஜனநாயகம் பற்றியும், ஜனநாயகம் சமூக முன்னேற்றத்திற்கு எவ்வாறு வழிகோலும், மேலும் சமூகத்தோடு எவ்வாறு ஒன்று பிணைந்து பழக வேண்டும் எனவும் பாடசாலைகளில் கற்றுத்தரப்பட வேண்டுமென பயன்பாட்டுவாத கல்வி எதிர்பார்க்கின்றது. உதாரணமாக இன்று இலங்கையில் உயர்தர கலை பிரிவுகளில் அரசறிவியல் சமூகவியல் போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

பயன்பாட்டுவாதமானது இலங்கை கல்வி முறையில் பயன்பாட்டில் உள்ளது. ஆரம்பம் மற்றும் இடைநிலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக மாணவர் மன்றங்கள் நடாத்தப் படல், உயர்தரத்தில் பல்வேறு வகையிலான பாடத்தெரிவுகள், விளையாட் டுப்போட்டிகள், இசை, நடனம், சித்திரம், பேச்சு, வாசிப்பு போட்டிகள், தேசிய மட்ட புத்தாக்க போட்டிகள் கட்டுரை,சிறுகதை என பல செயற் பாடுகள் நடைமுறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்றைய இலங்கையில் பயன்பாட்டுவாத கல்விக்கு அமைய தொழில் சந்தைக்கு தயார் செய்யும் வகையிலான தொழில்நுட்ப பாட நெறி, ICT கலைகளுக்கென தனியான பல்கலைக்கழகங்கள், நுண்கலைத்துறை போன்றவற்றின் ஊடாக மாணவர்களின் திறமைகள் வெளிகொணரப்பட்டவாறு காணப்பட, பயன்பாட்டுவாதமே தாக்கம் செலுத்தியவாறு காணப்படுகின்றது. பயன்பாட்டுவாத கல்வியின் விளைவாக இன்று இலங்கையில் 1000 இருமொழிப்பாடசாலைகள், Playschool, smart classroom காணப்படுதல் மற்றும் வகுப்பறையில் கணணி மூலை, செயற்பாட்டு மூலை, வாசிப்பு மூலை, அழகியல் அலகு, கேட்போர் கூடம், தொழில்நுட்ப அலகு, தொலைக்கல்வி அலகு, மற்றும் மகிழ்ந் தோதய தொழில்நுட்ப ஆய்வுக்கூடம், E-Thaksaawa, 5E கற்பித்தல் Audio,

Vidio உண்மை மாதிரிகளை கற்றலில் வழங்கல் போன்ற பல்வேறு செயல் பாடுகள் பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையில் இலங்கையின் கல்வியில் காணப்படுகின்றன என்பதற்கு பல நடைமுறைகளை உதாரணமாக கூறிக் கொண்டே போகலாம்.

அறிவைப் பயன்படுத்தும் கலையே கல்வி என்பதற்கு அமைய கற்றலில் சிறப்பாக கற்கக்கூடிய மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒழுங்கமைப்பில் ஆய்வு பரிசோதனை மற்றும் நவீன தொழில்நுட்ப செயன்முறையோடு ஆசிரியவாண்மைத்துவம் கொண்ட தேர்ச்சி மிக்க ஆசிரியர்கள் மற்றும் புத்தாக்க கலைத்திட்டத்திற்கு அமைவாக அதிநவீன கல்வியை இலங்கை பாடசாலை முறைமையில் மாணவர்களுக்கு வழங்குதல் என்ற தேசிய கல்வி நிறுவனத்தின் அனுபவம் மற்றும் நடைமுறை ரீதியான பயன்பாட்டுவாதத்தை ஆதரிப்பதாக அமைவதன் மூலம் வினைத்திறனான கற்றலில் பயன்பாட்டுவாதம் பெரும் பங்கினை தரக்ககூடியதாக உள்ளது.

கல்வி என்பது வாழ்க்கையை நடாத்துதல், கல்வி என்பது விருத்தி அடைதல், கல்வி என்பது அனுபவத்தை புதுப்பித்தல், கல்வி என் பது ஒரு சமூக நடவடிக்கை என்ற கருத்துக் கொள்கைகளையும் அறிவதற்காக கற்றல், செயலாற்றுவதற்காக கற்றல், இணைந்து வாழ கற்றல், என்ற யுனெஸ்கோவின் நான்கு அடிப்படை கல்வி தூண்களும் பயன் பாட்டுவாதத்தையே முன்னிறுத்தி இன்றும் நடைமுறையில் நேரடி யாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தி வருகின்றன..

கல்வி என்பது ஒரு தொடர்ச்சியான கருமத்தொடராகும். சமகால கல்வி முறையில் தொலைவிலுள்ள எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்து-வதும் ஒன்றாகும். முன்னாரம்ப பாடசாலை, இடைநிலை பாடசாலை, உயர்நிலைப் பாடசாலை, பல்கலைக்கழகம் என்றவாறு முழுக்கல்வியும் மாணவர்களை வாழ்க்கைக்கு தயார்படுத்துவதற்கே ஆகும். இதற்கு அனுபவத்தோடு கூடிய பயன்பாட்டு ரீதியிலான கல்வி பெரும் பங்காற்றுகிறது.

பாரம்பரிய கல்வி முறைமையானது கோட்பாடு கட்டமைப்பிற்கு வலுவான முக்கியத்துவத்தை அளிக்கும் அதேசமயம் பயன்பாட்டுவாதம் நடைமுறை பயன்பாட்டிற்கு வலுவான முக்கியத்துவத்தை அளிக்கின்றது. நடைமுறை பயன்பாட்டை கல்வியில் வலியுறுத்துவதன் மூலம் பயன் பாட்டு வாதம் உண்மையான வெற்றிக்கு அவசியமான நடைமுறை திறன்களை வளர்க்க மாணவர்களை ஊக்குவித்த வண்ணம் செயற்பட்டு வருகின்றது என்றால் மிகையாகாது.

ஆகவே நாம் கல்வி கற்கின்றோம் என்று கூறுவதை விட நாம் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றோம் என்பதே சிறப்பான கல்விக்கு இலக்கணம் ஆகும். எனவே கல்வியானது நிஜ உலகில் வெற்றிக்கு இன்றியமையாத திறன்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதால் பயன்பாட்டுவாதம் நவீன கல்வியில் சிறப்பிடம் பெற்றுள்ளது, பெற்று வருகின்றதும் கூட. பயன்பாட்டுவாதத்தின் முக்கியத்துவம் மாணவர்களை எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்துவதாகும். 21-ஆம் நூற்றாண்டில் மாணவர்களை வெற்றிக்கு தயார்படுத்தும் கல்விக்கான கட்டமைப்பை வழங்குவதில் பெரிதும் துணை நிற்கின்றது. உலகம் பூகோளமய செயற்பாட்டிற்கு உள்ளாகி பரிணமித்து வருகின்றமையால் கல்வியும் மாற்றங்களிற்குட்பட்டு மாணவர்கள் நிகழ்கால எதிர்காலத்தில் வெற்றி பெற தேவையான திறன்கள், அறிவு, மனப்பாங்கு, என்பவற்றை வளர்ப்பதும் பெற்றிருப்பதும் அத்தியாவசியமான ஒன்றாகும்.

எனவே கல்வியானது அனுபவங்களால் அனுபவத்தின் மூலம் வழங்குவதாக அமையப்பெற வேண்டும் என பயன்பாட்டுவாதம் விளக்கி நிற்பதோடு, எந்த நாடு பயன்பாட்டுவாதத்தை பின்பற்றுகிறதோ அந்நாட்டின் நவீன எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்க முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதுவே நிதர்சன உண்மையும் கூட. ஐரோப்பிய நாடுகளில் வெற்றி நடை போடும் அனுபவக் கல்வி தொடர்பான அனு பவம் இலங்கைக்கு முற்றும் முழுதாக கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். அந்த வகையில் பல தத்துவங்களும் நடைமுறைசார் விளக்கமும் பல கல்வியாளர்களுக்கு காணப்பட்டாலும் வளப்பிரச்சினை அனுபவக் கல்விக்கு தடையாக உள்ளது. இவ்வாறான தடைகளையும் சவால் களையும் எதிர்கொண்டு கல்வி வளர்ச்சி அடைந்த ஏனைய நாடுகளை விட இலங்கை கல்வி வளர்ச்சிக்கான பயணத்தில் வெற்றியடைய கல்விமான்கள் நடைமுறை சார் சீர்திருத்தங்களை மெருகூட்டினால் எதிர்காலத்தில் இலங்கையின் கல்வித்தரம் மென்மேலும் உயரும் சாத்தியம் உண்டு.



**ஆக்கம்:**
**ராஜரட்ணம் லக்சிகா**
இரண்டாம் வருட கல்வியியல்
சிறப்புக்கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

# வீழ்ச்சி கண்டு வீழாதே!



தாயகமே உன் அகம் பசை
தனி மனிதனின் தனித்துவமான ஆசை
ஈடு கொடுத்தால் தானா பூசை
இயல்பான இசை இருக்கையில் வசை

பாடும் திசையைக் கண்டு விசை
படகாக ஓட நினைத்தால் அசை
உடைந்து போகும் அவன் கசை
ஊடகத்தின் உரை ஓங்கியும் நசை

மக்கள் இருக்கின்றார்கள் தேசத்தின் பக்கம்
நம்நாட்டு தேசியக்கீதம் எங்கும் ஒலிக்கும்
வீழ்ச்சி கண்டு விடை பெறாதே
வீரர்கள் உள்ள நாடு துவளாதே
நலிவு இல்லாததா உந்தன் இடம்

இயற்கையின் எழில் நிறைந்த வனம்
தனித்துவ ஆட்சியை வீழ்த்த வரும்
வீழ்ச்சியை கண்டு வீழாதே தேசமே
வியக்க வைப்போம் என்றொரு தினமே

விடியல் உண்டு தினம் தினமே
நம்பிக்கை கொண்டு நடக்கனும் மனமே
ஓய்வு எடுத்தால் ஒதுக்கிடும் சனமே
ஓயாத முயற்சி அது பயிற்சி

இடையில் யாரு வந்தாலும் வீழ்த்தி
போராட்டத்தில் போரிட்டு
பொறாமையை விட்டு
பொது மகனாய் வெற்றியை கண்டிடு

(பசை- ஈரம்
பூசை- ஆராதனை
வசை- பழிப்பு
விசை- வேகம்
அசை- செய்யுள் உறுப்புகளில் ஒன்று
கசை- கவசம்
நசை- குற்றம்)

**பானு ஜிப்ரி**
சாய்ந்தமருது

# றோணியோக்களின் வளர்ச்சி

# 14





அறிவாற்றல், நல்ல சிந்தனைப் போக்கு கொண்டவர்களின் எழுத்தாளுமை திறமை இவைகளின் வெளிப்பாடு இலக்கியப் படைப்பாகவும் கலைகளாகவும் பரிணமித்து எங்கும் எதிலும் மொழியோடு செயல்படுகிறது.

அந்தவகையில் றோணியோக்களின் மூலமாக நிறைய எழுத்தாளர்கள் தனது தரத்தை உயர்த்தி இன்றும் இலக்கிய இருப்பிடத்தை தக்க வைத்திருக்கின்றனர். மூத்த எழுத்தாளர்களின் எழுத்தாள்மை தனியாக மதிக்கக் கூடியதாக உள்ளது.

ஆரம்பக் கால இலக்கிய வளர்ச்சிக்கு பங்காற்றிய சஞ்சிகைகள் றோணியோக்களாகும். இவை மிகமிக தரமான பங்களிப்பினை செய்திருப்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத செய்தியாகும்.

இன்று உங்கள் பார்வைக்காக தரும் றோணியோ 'தூரிகை' ஆகும்.

தூரிகை' காலாண்டிதழான இது 1985 ஜூன் 1 ஆம் திகதி கலைநிலா ஐயூப்கான் அவர்களை ஆசிரியராகவும், ஆசிரியர் குழு: சம்சுல் ஆரிபீன்,. ஏ.சி.ஜரீனா, எம்.எச். றுசிதா, கலைமலர் நூரா ஆகியோர்களால் வெளிவந்துள்ளது.


வீழும் வாழ்வு...!

— அன்பிதயன் சிறாஜ் —

உரிமைகளை இழந்த
உயிர் மூச்சுகள்....
பாவக் கறை பட்டு
பரிதாப கோலங்களாய்
மாறி நிற்கும்....

அடிமை முத்திரை
ஒட்டப் பட்டதாய்
உருக்குலையும் வாழ்வு
ஆதரவில்லாது —
ஆதுரத்தைத் தேடும்...

விடிந்த பொழுதுகளும்
கருகிய இரவுகளும்
சோகச் சுமைகளையே
சுமந்து நிற்கும்....

ஒரு கணப் பொழுதிலும்
நிலைமாறி —
நினைவுகளில் மூழ்கி
தவிக்கும் நெஞ்சு...

துடிக்கும் நரம்புகளும்
துவளும் உணர்வுகளும்
ஊனக் குளிருடன்
ஒட்டி —
உடல் நடுங்கும் .

விதியின் போக்கையில்
விதிகளை நிர்ணயித்து
சாபமிட்ட வாழ்வு...
ஒரே பார்வையில்
உயிர் பறிக்கும்...

காலையில் பூத்து
மாலையில் வாடும்
மலர்களோ வாழ்வு?
சீ......
நாறிய வாழ்வு!

தூரிகை (3)

- நான்- கலைநிலா ஐயூப்கான்
- உத்தமனே கலைமலர் நூரா
- சமுதாயம்-சித்தி ஜெமீனா
- பெரு(ம்)நாள்! - ஏ சி.ஜரீனா
- ஏக்கம் - றம்புக்கலையான்
- தொடர்கதை சிறையில் வாடும்
- பேராசை' - மலர்நேசன்
- ஆசிரியர் கருத்து

*என்பன இடம்பிடித்து உள்ளன. இரண்டாவது தூரிகை 1985 செப்டெம்பர் காலாண்டிதழ். நிர்வாகி எம்.ஏ.எம் நயீம். அட்டைப் படம் அபூ.*

*அழகமைப்பு ஓவியம் அன்பிதயன். உள்ளே கவிதைகளாக*

- தெரு தரிசனம்- இபுனு அஸூமத் வீழும்
- வாழ்வு- அன்பிதயன் சிறாஜ்
- இருவர் எண்ணங்கள்- கம்பளைச் செல்வி ரம்ஸான் மன்சூர்
- பலிபீடம்- கலைமகள் ஹிதாயா
- வாழ்வெனக்கு பெரிதில்லை- அ.கௌரிதாசன்
- தவிக்கின்றேன் - செல்வி பாத்திமா மரிக்கார்
- உன்னழகில்-மருதூர் றிஸ்மி மஜீத்
- போதும் உன்பொறுமை - யாழ் . இளைய நிலா

*உள்ளே. கவிதைகளாக....*

- என் தமிழ் சிநேகிதிக்கு- ஆர்.எம். நௌஸாத்
- ஒரு சரித்திர நூல் -மெஹருன் நிஸா றிஸாட்
- கேள்வி நீ. பதில் நான்- எம். எம்.சித்தி பாஹிதா
- நினைவுள்ள வரை- எஸ். எம்.எம் சுமன்
- இவை தீ நாக்குகள் - ஈழகணேஷ்
- ஏன் - நஸீரா ஹாமீம்
- வெகுவிரைவில் - எஸ்.ஸெல்லம் இப்றா

- இவள் வாழ்க்கை இது.- ஏ.சி.கமறுன் நிஸா
- வருவாயோ -எஸ்.என்.நிஸா
- இலங்கை நாட்டின் இன்றைய அவலம் மருதூர் ஜமால்தீன் ,
- பெருமாற்றம் - என்.இராஜம்புஷ்பவனம்
- உறக்கமில்லை-எம்.ஜே.எம்.நஸீர்
- உயிருள்ளவரை - என்.கே.எம். றிஹானா
- மறைந்த இந்திரா காந்தியின் அறிவுரை தொகுப்பு-எம்.வை.ஸம்சுல் ஆரிபீன்
- வாசகர்களின் கருத்து
- சிறையில் வாடும் பேராசை


முன்னைய இதழ்
தொடர் 11 -
மலர் நேசன்

- அன்புசால் இலக்கிய வாசகர்களே!
- ஆசிரியர் உரை

*மீண்டுமொரு றோணியோ வுடன சந்திப் போம்.*



**எஸ்.யூ.கமர்ஜான் பீபீ** (J.P)
வத்தளை



THOORIKAI 1

ஆசிரியர் கருத்து.....

அன்புசால் இலக்கியப் பிரியர்களே!


இத்துடன் எமது வெளியீடான தூரி
கையை உங்கள் முன் சமர்ப்பித்தி
ருக்கிறோம். வளர்ந்து வரும் எமது
இலக்கியப் பணியின் ஒரு சிறு முன்
திருப்பமேதான் இது... றோணியோ
ஏடுகள் மலிந்து விட்ட இக்கால
கட்டத்தில் எமது இந்தத் தூரிகை
ஒரு சிறு சாதனையாவது புரிந்
தால் அதுவே எமது பணிக்கு
மேலானதாகும்.

உங்கள் ரசனைக் கேற்ப எமது
இவ்வெளியீட்டின் தரத்தை நிர்ண
யிக்க தங்களது ஆக்கபூர்வமான
[illegible] எமக்கு அனுப்பி வை
யுங்கள்...

இதனை அமைத்துதவிய நண்பரின்
இலக்கிய இதயத்தை எம்மால் என்
றும் மறக்கவே முடியாது.....

நன்றிகளோடு....
ஆசிரியர்

# இணையத்தின் இரக்கம்



**கவிமகள் ஜெயவதி**

இணையத்தில் இங்கே
துணைதேடும் பெண்ணே
பணையமாக்கிடாதே
பரிசுத்தமான அன்பை
விரையமாக்கிடாதே விண்
தொடும் பண்பை


கண்ணே மணியே
முத்தே மலரே
பத்தோடு பதினொன்றல்ல
பாவை நீயே என்
தேவையடி என்பார்கள்
பைங்கிளி உன்னையே
பலியாக்கும் வரையில்
பசுந்தோல் போர்த்தி
பதுங்கியே இருப்பார்கள்

சொத்தே என்
சுகமே என்பார்கள்
சொல்வதெல்லாம் நீ நம்பித்
தொலையாதே

அப்பாவிப் பெண்ணே
தப்பாகிப் போகாதே
எப்பாவி தவிப்புக்கோ
எல்லை தாண்டிப் போகாதே

காலம் கலிகாலம்
கண்ணே
பாவம் நீ பலியாகாதே
பெண்ணே

புத்தியைத் தீட்டு
யுக்தியைக் காட்டு
சத்தியமாய்ச் சொல்கிறேன் நீ
சாதிப்பாய் உறுதி



# சமூகத்தில் முகநூலின் சங்கமம்

முகமறியாத் தோழருடன் அக நகநட்புடன்
நெருங்க வைக்கும், நட்புச் சந்தையிது
போலியாய்ப் பழகியவராற் புதைகுழிக்கும் அனுப்புமிது

நட்பினிலே கஸ்தூரி விற்பவனும்,
இரும்பை உருக்குகின்ற கொல்லனும்,
கலந்தாடும் நவீன அரங்கமிது

கண்டங்கள் எங்கிலும் நடப்பதைச்
சுடச்சுடவே, கணப்பொழுதிற் காட்டி,
உலகையே, குலை நடுங்கவும் செய்யுமிது

நம் முன்னோர்கள் கண்டிராத
இந்த மண்ணோரின் மாபெரும்
அறிவியல் ஆக்கமிது

இன்றைய அறிவியலில் அடர்ந்திருக்கும்,
கனதியான கருத்துக்களை,
இலகுவாக்கவும் உதவிடுது

பழைமைகளைப் புரிய வைத்து,
புதுமைகளையும் போற்ற வைத்து,
புத்தாக்கம் படைத்திடப் புத்தூக்கமும் கொடுத்திடுமிது

இலக்கியங்கள் இலங்கிட, இலக்கணமும் விளக்கிடும்!
இளந்தமிழில் நறுமணமுடைய
பாப்பூக்களையும் சொரியுமிது

பாமரரும் பாலகரும், தாய்மாரும்,
பள்ளி மாணவரும், உள்ளே விழுந்து,
மூழ்கியே தத்தளிக்கும் ஆழக் கடலிது

சித்தராகவும் துலங்கி உடல் நலமிடும்!
கழுத்தறுக்கக் கத்தியெடுக்கவும் தூண்டுமிது
மெய்யாக மெய்யினுள் ஊடுருவி,மெய் மறக்கச் செய்யும்!
மேன்மையான நேரத்தையும் தின்னுமிது

நல்லாரின் பெருமைகளையும்,
பொல்லாரின் கொடுமைகளையும்,
குவித்துக் கொட்டிக் கும்மாளமிடுகின்ற,
கொந்தராத்துக் கூடமிது

வழி கெடுத்துக் கடுமையான
வலிகொடுக்கும்! இதயங்களை
இடம்மாற்றி இனிக்கவும் வைத்திடுமிது

மையழகில் மலிந்திருக்கும்
மங்கையரில் மையல் கொள்ள வைத்துப்,
பலரின் மனங்களையும் மாசாக்குமிது

நாணயமில்லா நட்பூக்களின்
சரசங்கள் சரங்களாகித் தேங்கி
நாறிடும், சாக்கடையுமிது

பேதையரினதும் பெருந்தகையான பேதையரினதும்,
கரங்களிற் தவழும் போதையூட்டியிது
முகநூலில் முக்குளித்து முத்தெடுப்போரே!
மணிக்கணக்கில் மூழ்கிடாத சங்கமத்தில்,
வளமான வண்ணமணிகளைப் பெறுவீரே!

-கிண்ணியா சபீனா

# உறவுகளுக்கு ஏனோ என்னைப் பிடிப்பதில்லை

ஊர் கதைகள் பேச எனக்கு நேரமில்லை அதனாலே
உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை
சொந்தங்கள் சேருமிடம் அது சாத்தான் நமக்கு சங்கூதுமிடம்
ஊர் வம்பு பேசுமிடம் குத்தல்கள் குத்தாட்டம் போடுமிடம்
பழிகளை வீணாக சுமக்குமிடம் வினைகளை அறுப்பதற்கென்றே
விதைக்குமிடம் நரம்பில்லா நாக்குகள்
தாளத்தோடு நடனமாடுமிடம் நடனக் கலைகள் பயின்றதில்லை
அதனால் உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

வேப்பிலையில் தேன் தடவி சர்க்கரைக் கிண்ணம் மேல்பரப்பி
இனிக்க இனிக்கப் பரிமாறப்படும் அது
என்னருகிலும் வரும் இனிப்பாய் வரும் – அதை நான்
கசக்கிறது என்பதால் உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

நாலு வாய் சேர்ந்து நாற்பது கதை பேசும்
நாறிப்போன தன் கதையை  நாவாலே மூடும்
கோள் மூட்டிக் குளிர் காயும் நரிகளுடனும் ஒத்துப்பாடி ஓலமிடும்
ஓநாய்களுடனும் வாய் கிழிய வளவளக்கும் தவளை நூறு
அதனோடு கண் விரியக் கதை கேட்கும் அறிவில்லா ஆந்தைகள் சிலவும்
கூட்டமாய் சேர்ந்து கும்மியடிக்கும் கூட்டத்தோடு கும்மியடிக்க
தெரியாததால் உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

தன் முழு பூசணியை ஒரு பருக்கையில் மறைத்துக் கொள்ளும்
உள் வீட்டு சங்கதியை பக்குவமாய் பின்பக்கம் தாழிட்டுக் கொள்ளும்
சக உதிர வறுமையெல்லாம் முற்றத்தில் ஏலம் விடும்
தம்முறவின் மானத்தை முழு உறவும் சேர்ந்து சலவை செய்யும்
ஆடைகளைக் கழுவத் தெரிந்த எனக்கு மற்றவர் மானத்தை கழுவத்
தெரியாததால் உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

ஆலம் விதைத்த வார்த்தைகள்
பேசியே பழகிப்போன உடல் மொழிகள் – சிறந்த நாடக
கலைஞர்களாததால் ஒத்திகை இன்றியே
நாடகங்கள் அரங்கேற்றப்படும்

போலிப் புன்னகைகள் கூவி விற்ககப்படும்
சிடு மூஞ்சாய் போனேன் நான் பொய்க்கிழிக்க தெரியாததால்
உறவுகளுக்கு என்னை பிடிப்பதில்லை……

கண்டதும் புளங்காகிதமடையும் கட்டியணைத்துக் கொள்ளும்
பின்னுள்ளவர்களிடம் கண் ஜாடையால் கழுத்தறுத்துக் கொல்லும்
கண் ஜாடை காட்டும் வித்தை கற்றுக்கொள்ளத் தவறியதால்
உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

பிஞ்சுப் போன செருப்புகளும் செருக்காய் சிரசேரும்
முத்து பதித்த வைர மகுடங்கள் காலுக்கடியில் நொறுக்கப்படும்
அல்லிப்பூவை கள்ளிச்செடியென்றும் மாணிக்கத்தை
கூழாங்கல்லென்றும் குருட்டுக் கதைகள் பேசிக்கொள்வர்
ஒன்றாய் சேர்ந்து புழுங்கிக் கொண்டே உள்ளுக்குள்
பொறாமைத் தீயில் புழுங்கிக்கொள்வர்
புத்தி விற்று பூரிக்கத் தெரியாததால்
உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

கல்யாண வீடுகளில் கால் மேல் கால் போட்டு கச்சேரி நடத்திடுவர்
கட்டுக்கதைகளை ராகத்துடன் வில்லுப்பாட்டாய் பாடிடுவர்
நிறைகளை தூசாய்த் தட்டிடுவர் குறைகளை மட்டும் ஓயாமல்
நிறைவாய்ப் பேசிடுவர் நிறைகுடமாய் இருப்பதனால்
உறவுகளுக்கு என்னைப் படிப்பதில்லை

கடிவாளம்  பூட்டா புறமெனும் குருட்டுப் புரவி ஏறி
தடை விதிகள் போட யாரும் இன்றி தறிகெட்டுத் துள்ளியோடும்
யாரையெல்லாம் முட்டி காயப்படுத்துகிறோம் என்ற கவலை இன்றி
பந்தயத்திற்கு என்னிடம் கிறுக்குப் பிடித்த ஒரு கழுதை கூட இல்லாததால்
உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை

சிவப்புக் கண்ணாடி மட்டுமே அணிந்து கொண்டு உள்ளொன்று
புறமொன்று வீணாக வம்பளந்து உடனிருந்து குழி பறித்து உருட்டிப்
பிரட்டும் இவர்களின் ஒப்பந்தத்தில் எனக்கு உடன்பாடு இல்லாததால்
உறவுகளுக்கு என்னைப் பிடிப்பதில்லை.
என்றாலும ஓரடி தள்ளி நின்று என் இனிய உறவுகளுடன் உறவாட
எனக்கு ரொம்பவே பிடிக்கிறது

**ஷிபானா பரீதா, -** பதுளை.

# பழமொழிகள்
## பற்றிய தெளிவுகள்

பழமொழிகள் என்ற சொல்லானது வளர்ந்து வரும் ஒவ்வொருவரினதும் செவிகளில் கட்டாயம் நுழைந்திருக்கக்கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் முதுமொழி என்ற அமைப்பில் காணப்பட்ட இச் சொல்லாடல் காலப்போக்கில் பழமொழி என மாற்றமடைந்து, தற்கால இளைய சமுதாயத்தினரிடம் பழைய மொழி என்ற வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் காணலாம்.

தான் விளக்குவதற்காக எடுத்துக் கொண்ட பொருளை அல்லது கருத்தை சுவையாகவும் தெளிவாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றுவதற்கு பழமொழிகள் துணை புரிகின்றன. ஆரம்ப காலத்தில் அவை பயன்படுத்தப்பட்டு வந்த பொருள், தற்காலத்தில் பிற பொருளாக மாற்றப்பட்டு பயன்பாட்டில் நிலவி வருவது மிகவும் வருந்தத்தக்கது. அவ்வாறு மாற்றமடைந்த பொருள்களையும் அவற்றின் உண்மையான பொருள்களையும் இங்கு நோக்குவோம்.

- **கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.**

கழுதைக்கு கற்பூர வாசம் தெரியாது என்பதே நாம் பயன்படுத்தும் பொருள் அமைப்பு. ஆனால் ‘கழு’ என்பது ஒரு வகைக் கோரைப்புல். அதனைப் பயன்படுத்தி தைக்கப்பட்ட பாயில் கற்பூர வாசனை வருமாம். இதனைச் சொல்வதற்குத்தான் ‘கழு’ தைக்கத் தெரியுமாம் கற்பூர வாசனை என்று கூறியிருக்கிறார்கள். காலப்போக்கில் கழுதை உள்ளே வந்து விட்டது.

- **உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.**

வயிறு (தொப்பை) குறைந்து சிறியதாக இருப்பது தான் பெண்களுக்கு அழகைத் தரும் என்பது நம் கருத்து. ஆனால், உண்டி என்பது சாப்பாடு. அதை செய்வதற்கான நேரம் அதிகமாகும் போது பெண்கள் சமையலறையிலேயே முடங்கி விடுகிறார்கள். இந்நிலை மாறுவதற்கு அவர்கள் சுவையான சமையலை குறுகிய நேரத்திற்குள் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே அவர்களுக்கு அழகு என்பதே பொருளாகும்.

- **ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.**

சித்த வைத்தியத்தில் வேர் தான் மூலாதாரம். பல வேர்களைப் பற்றி அறிந்து கொண்டால் தான் வைத்தியம் கற்றுக் கொள்ள முடி யும். ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்றிருந்த பழமொழியில் வேர் எனும் சொல் தான் பிற்காலத்தில் பேர் என மாறி இருக்கிறது.

- **ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி தான்.**

இங்கு ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றால் அரசன் கூட செல்வங்கள் அனைத்தையும் இழந்து ஏழையாவான் என தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், ஐந்து என்பது,

1. ஆடம்பரமாக வாழும் தாய்
2. பொறுப்பில்லாத் தகப்பன்
3. ஒழுக்கம் தவறும் மனைவி
4. துரோகம் செய்யும் உடன் பிறப்புக்கள்
5. பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை என்பனவாகும்.

**என். எஸ். சதீகா றஸ்லி**
புத்தளம், றசூல் நகர்



# ஆண் தேவதைக்கு மகுடம்

இலக்கியங்கள் சொல்ல மறந்த காவியம் தான் ஆண் தேவதைகள். இயற்கை, அழகு, அறிவு, பொறுமை என்று எல்லாவற்றையும் பெண்மைக்கு முன்னிலைப்படுத்தியவர்களே ஆண்கள்தான். ஆனால் ஆண்களின் உழைப்பும், அன்பும், தியாகமும் பலரின் கண்களுக்கு தெரிவதில்லை. அப்படி தெரியாமல் பார்த்து கொள்வதும் ஆண் தேவதைகளின் சாதுரியம் தானே ..!

பெண்கள் மட்டும்தான் தேவதைகளா? இல்லவே இல்லை. பிள்ளை களின் ஒய்யார நடைக்கு பின் ஓய்வில்லாமல் உழைக்கும் ஒரு ஆணின்

உழைப்பு ஒளிந்திருக்கிறது. உலகில் மிகப் பெரும் வலி பிரசவவலி என்று கூறுகிறார்கள். ஆனால் தாயின் உடல்சார்ந்த சிரமங்கள் பத்து மாதங்களில் முடிவடைகிறது. ஆண்களுக்கோ பிரசவ அறையின் வாயிலில் தொடங்குகிறது போர்க்களம். பிள்ளைகளின் பள்ளி, கல்லூரி, அலுவலகம், திருமணம், பேரப் பிள்ளைகள் அவர்களின் தேவைகள்டு இப்படி கடமை நீண்டு கொண்டே போகிறது .

**புன்னகைக்கும் பெண் 'அழகு '**
**அவளை அழவிடாமல்**
**பார்த்து கொள்ளும் ஆண்**
**'பேரழகு'!**

பத்து மாதம் சுமக்கும் தாயை விட ஆயுள் வரை குடும்பத்திற்காக ஓடும் ஆணின் உழைப்பு சற்று பெரியதாகதான் தெரிகிறது. குடும்பம் என்னும் கோட்டையை கட்டி எழுப்புபவன் ஆண்மகன். இல்லத்தில் உறவுகள் இளைப்பாற ஓயாமல் சுழலும் சக்கரம்தான் ஆண் தேவதைகள். உடலால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் ஆண் வலிமையானவன். பெண் எல்லா வற்றையும் எளிதில் கொட்டி தீர்த்துவிடுவாள். ஆனால் ஆண்மகனோ நிதானித்து தான் வார்த்தைகளை கூறுவான். மகிழ்ச்சியோ சோகமோ எதுவாயினும் பெரிதாக வெளிப்படுத்தி கொள்ளாத தன்னலமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் ஆண் தேவதைகள் .

பிள்ளைகளின் முதல் கதாநாயகன் 'அப்பா'. எனவேதான் சிறு வயதில் அப்பாவின் உடையையும் நடையும் பின்பற்றுவார்கள் குழந்தைகள். அதை கண்டு பேரானந்தம் கொள்வார் தந்தை. அப்பாவின் அக்கறையும் கண்டிப்பும் பிள்ளைகளுக்கு யானை பலம். தந்தையின் அன்பு ஆழமானது. சிலசமயம் ரகசியமானதும் கூட .

ஒரு ஆண் தன் மனைவி குழந்தைகளுடன் உணவகத்திற்கு செல்கிறான். மகிழ்ச்சியாக உணவருந்திய பின் தன் வாகனத்தில் ஏறினான். கடுமையான வெயிலில் ஓட்டை குடையை பிடித்தபடி எதிர் வெயில் முகத்தில் அடிப்பது கூட பாராமல் அயர்ந்து நாற்காலியில் அமர்ந்தபடி உறங்கி கொண்டிருந்தார் அந்த உணவகத்தின் காவலாளி. அவரை கடந்த பின் மீண்டும் பின்னோக்கி வந்து அவரை எழுப்பி, அவர் கைகளில் ஐம்பது ரூபாயை கொடுத்தான் கணவன். 'மிக்க நன்றி ஐயா' என்று புன்னகைத்தார் காவலாளி .

இதனை கவனித்த மனைவி, 'தூங்குவதற்கு பரிசா..? என்று கணவனை கடிந்து கொண்டாள். அதற்கு கணவன் , இன்றைய கால சூழலில் எவ்வளவு விலைவாசி ஏறி விட்டது என்று உனக்கும் தெரியும். இவருடைய சொற்ப வருமானத்தில் எப்படி எல்லா தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்? அவருடைய அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்ய நம்மால் இயலாது. ஆனால் இன்று இரவு அப்பாவின் வருகைக்காக காத்திருக்கும் அவர் குழந்தைகளுக்கு இனிப்புகள் வாங்கி செல்ல இந்த சிறுதொகை உதவியாய் இருக்கும்' என்றான். மனைவி புரிந்துகொண்டாள்.

பெண்கள் நிகழ்த்தும் வரவு செலவு பட்டியலில் எதிர்பார்ப்பு இருக்கும். பிறந்தநாள் பரிசு என்ன கொடுக்க வேண்டும், திருமண மொய் எவ்வளவு வைக்க வேண்டும், நேரில் வந்து திருமண பத்திரிக்கை கொடுக்காத நிகழ்ச்சிக்கு போக வேண்டுமா, நேரில் வந்து கேட்காதவருக்கு உதவி செய்ய வேண்டுமா, என இப்படி பல எதிர்பார்ப்புகளை அடுக்கி வைத்து கொள்பவள் பெண். ஆண் இந்த கோட்பாடுகளுக்கு அடங்காத காளை.

ஆம் ஆண்களின் பார்வை விசாலமானது (wider view) பெண்களின் பார்வை பெரும்பாலும் குறுகியதாக (tunnel view)இருக்கும். காரணம் பெண்ணின் உலகம் தன் குடும்பத்தை பற்றி மட்டுமே சுயநலமாக இருக்கும். இல்லம் மட்டுமே அவளுக்கு பிரதானம். ஆனால் ஆண் தன் சக மனிதனையும் தன் உறவாக ஏற்று கொள்கிறான் .

**வெயிலில் கருத்து**
**சுருங்கிய தேகமும்**
**வெடிப்பு விழுந்திருக்கும் பாதங்களும்**
**நரம்பு தெரியும் கரங்களும்**
**நரை விழுந்த தலைமுடியும்**
**சொல்லாமல் சொல்கிறது**
**ஆண்களின் வாழ்க்கையை.**


பெரும்பாலான பெண்கள் கவலைகளை புலம்பி தீர்த்து விடுவார்கள். ஆண்களோ எல்லாவற்றையும் மனத்திற்குள் வைத்து நிதானமாகவே செயல் படுபவர்கள். அழுகையை ம றைத்து தன் குடும்பத்திற் காக ஓடும் ஆண்கள் நாம் எல்லோரும் பாராட்டாத, மகுடம் சூட்டாத ஆண் தேவதைகளே!



**சூர்யா பாலகிருஷ்ணன்**
M.Sc., M.Phil., B.Ed.

நூல் அறிமுகம்

# நிலவொளியில் அசையும் சிலந்திவலை




தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த பாக்யபாரதியின் 'நிலவொளியில் அசையும் சிலந்திவலை' என்கிற கவிதை நூலை வாசித்தேன். ஒவ்வொரு பக்கமாக புரட்டப் புரட்ட எனது சிந்தனையும் விரிவடைவது போலிருந்தது. இந்நூல் வெவ்வேறு தலைப்புகளில் மொத்தம் நாற்பத்தோரு கவிதைகளைத் தனக்குள் பத்திரப்படுத்தி வைத்துள்ளது.

முதல் கவிதையே 'இலக்கை நோக்கி' என்கிற தலைப்பில் சிறப்பாக அமைந்துள்ளது.

**கடல்தாண்டி**<br>
**பறந்து சென்று**<br>
**தனது குஞ்சுக்காக**<br>
**இரை கொண்டு வரும்**<br>
**பறவையைப்**<br>
**பார்த்ததில்லையா?**<br>
**சிலந்திவலையும்**<br>
**தேன்கூடும் - உன்**<br>
**கண்களுக்குத்**<br>
**தென்படவில்லையா?**

என்ற வரிகள் முயற்சியைக் கைவிட்டு, எல்லாம் முடிந்தது அவ்வளவுதான் என்று வீழ்ந்து கிடப்பவனுக்கு நம்பிக்கையைத் தந்து தொடர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதை உரக்க சொல்கின்றன.

நாட்டின் முதுகெலும்பு விவசாயம் தான். அப்படிப்பட்ட உயர்ந்த பணியை செய்பவர்களை நாம் எப்போதும் மதிக்க வேண்டும் என்பதை 'முதலிடம் உழவனுக்கே' என்ற கவிதையில் எடுத்துரைக்கிறார்

**குழந்தையின் கண்ணில்**<br>
**தூசு விழுந்த கணம்**<br>
**துடித்துப் போகும்**

அன்னையைப் போலவே
கட்டிய வேட்டியின்
முனையை - தன்
உமிழ்நீரால் நனைத்து
ஒத்தடமிடும்
தந்தையின் பாசமும்
பெரிதுதான்!

இந்த கவிதை, பொதுவாக பாசத்திற்கு அன்னையை மட்டுமே அடையாளம் காட்டும் இவ்வுலகில் தந்தையின் பாசமும் அவளுக்கு இணையானதுதான் என்று அடித்துச் சொல்கிறது.

பிறப்பும் இறப்பும் ஒருமுறையே. ஆதலால் இருக்கும்வரை நல்லவராக இருக்க முயற்சி செய்யுங்கள்.

ஊனமான விழிகளுடன் உலவும் மானிடர்க்கு கண்தானம் செய்வீர் என்று அறிவுறுத்துகிறார். ‘உன் ஏமாற்றத்தினால் நான் கவிஞனானேன்’ என்ற கவிதையை வாசித்த போது என்னுடைய பால்ய பருவமும், இளமைப்பருவமும் சில நிமிடங்கள் எனக்குள் ஊஞ்சலாடி விட்டு சென்றது. வாசிப்பவரின் வாழ்வியலோடு ஒத்துப்போகும் இந்த இடத்தில் நூலாசிரியர் அவரின் படைப்பில் வெற்றி பெறுகிறார்.

பணபலம்
பதவிபலம்
சாதி பலமென்று
எவ்வித பலமும்
இல்லாதவருடைய
தேவைகள்
நிறைவேற நிறைவேறதான்
நிமிரத் தொடங்கும்
சமத்துவம்...

என்ற கவிதை இன்றைய சமூகத்தின் நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அதே வேளையில் சமத்துவம் மலர சமூகம் இன்னும் மாற வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

பொய்களும் போலிகளும் எவ்வளவுதான் ஆட்டம் போட்டாலும் உண்மையை சில காலம் அழுத்தி வைக்கலாமே தவிர அழிக்கும் ஆற்றல் அவைகளுக்கு கிடையாது என்கிற எதார்த்தத்தை, இறுதி கவிதையான ‘உண்மைக்கு மரணமில்லை’ என்பதில் குறிப்பிட்டிருக்கிறார். எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ள கவிஞர் பாக்யபாரதி மென்மேலும் பல படைப்புகளைப் படைத்துப் புகழ் பெற வாழ்த்துகள்.

அன்புடன்
**மோகன்,**
ஆசிரியர்
நாமக்கல்

**நூலாசிரியர்:** பாக்யபாரதி
**நூலின் விலை:** ₹120
**வெளியீடு:** மகிழினி பதிப்பகம்
**நூல் தேவைப்படுவோர்**
**அணுகவும்** 6382441306

# தூரிகை வரையும் மின்மினிகள்

## ஹைக்கூ நூல் விமர்சனம்




**கவிமணி S.A.றஸாக் (கனல் கவி)**
ஓய்வு நிலை கோட்டக்கல்வி
அதிகாரி
ஏறாவூர்.

ஒரு கவிதை எனப்படுகின்ற போது அது எவ்வகைமையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதற்கு கருவும் உருவும் இருப்பது மிகவும் அவசியமாகும். அதன் பின்னர் தான் அதற்குரிய அணிகலன்களான எதுகை மோனை உவமான உவமே யங்கள் சந்தம் என்பன தேவைப்பாடு உடையதாகிறது. ஆனால் மேற் சொன்ன அணிகலன்கள் ஹைக்கூ கவிதைகளுக்கு பொருந்தாது.

கருவறையில் கருவாகி உருவாகி உருவமாகி முழுமையாகி பிறந்தால் தான் குழந்தை, இல்லையேல் பிண்டமே. உள்ளத்தில் கருவாகி உருவாகி உட்பொருட்களோடு முழுமை அடைந்து பிறப்பெடுப்பதே கவிக்குழந்தை. இவற்றை செவ் வனே நிறைவு செய்து 786 ஹைக்கூ கவிதைக் குழந்தைகளைப் பிரசவித்தி ருக்கின்றார் தூரிகை வரையும் மின்மினிகளின் அன்னை Dr. ஜலீலா முஸம்மில் அவர்கள்.

பொதுவாக ஹைக்கூ கவிதைகள் என வருகின்ற போது இதன் முன்னோடிகளான ஜப்பானியக் கவிஞர்கள் மொரிடாகே, சோகன், மட்சுவோ பாரோ ஆகியோர்களைத் தொட்டுச் செல்லாமல் எந்த ஊர் இறந்தகால நிகழ்கால கவிஞர்களும் செல்வதில்லை.

இவ்வாறு தான் தமிழில் ஹைக்கூவை அறிமுகப்படுத்திய எட்டயபுரத்து கவிவேந்து பாரதி யார் மற்றும் தமிழில் முதன் முதலாக ஹைக்கூ கவிதைகளை வரைந்த கவிக்கோ அப்துல் ரகுமான் ஆகியோரை விளித்தவர்களாக தமிழ்நாட்டினதும் இலங்கை யினதும் பல கவிஞர்களும் நூல் களையும் ஹைக்கூப்பாக்கள் நூல் விமர்சனங்களையும் ஹைக்கூ பயிற்சிக்களங்களை வெளியீடு செய்தும் செயல்படுத்தியும் வருகின் றனர்.

1988 ஆம் வருடம் முதல் இலங்கையர்கள் நாம் ஹைக்கூ கவிதைத் தொகுப்புகளை வெளியீடு செய்த போதும் நான்கு பெண் கவிஞர்களைத்தான் தொகுப்பு

நூலை வெளியிட்டோராக அடையாளப்படுத்தலாம். அதில் மூவர் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதில் நான் பெருமை அடையும் அதேவேளை 786 ஹைக்கூ கவிதைகளை தொகுத்தளித்த ஹைக்கூ கவிதைகளின் விற்பன்னராக Dr. ஜலீலா முஸம்மில் அவர்கள் அடையாளப் படுத்தப்பட்டு இருப்பது தமிழ் இலக்கிய உலகம் பெற்றுக்கொண்ட பேறாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

உண்மையிலேயே கவிஞரைப் பற்றி பிரமித்து நயந்த பல விடயங்கள் உள்ளன. சிறந்த மனைவியாக, தாயாக, மற்றும் பிள்ளைகள் பராமரிப்பாளராக, உறவுகள் பேணுனராக, மனிதாபிமான வைத்தியராக எனப் பல்வேறு பாத்திரங்களைப் பார்த்துக் கொண்டு தினமும் முகநூலில் அழகிய கவிதைகளும் மகத்துவமிக்க கருத்துக்களையும் பதிவேற்றுவது மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மின்னிதழ்கள் என சுமார் 40க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்குத் தனது ஆக்கங்களை வழங்குவது இன்னும் ‘சிறகு முளைத்த மீன்’ எனும் புதுக்கவிதைத் தொகுதியை வெளியீடு செய்தது மட்டுமல்லாது தற்போது தூரிகை வரையும் மின்மினிகள் எனும் 786 கவிதை ஹைக்கூ கவிதைகளை வெளியீடு செய்வது என மிகப்பெரும் இலக்கியப் பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பதை பல்லாளுமைப் புலமைத் தேர்ச்சி என்றுதானே புகழ வேண்டும்.

இக்கவிதைத் தொகுப்புப் பிரதி என்னிடம் வழங்கப்பட்ட போது கவிதைகளின் செழுமை கண்டு கொண்டதால் வாசிக்கும் ஆவல் ஆட்கொண்டதால் அனைத்துக் கவிதைகளையும் மூலைத்தாள்களை மடித்து மூடாமல் முழுவதும் வாசித்து முடித்தேன். படிக்கப் படிக்கக் கடிக்கக் கடிக்க சுவைக்கும் பலாச்சுளையாக ஹைக்கூ கவிதைகள் இனித்தன. தேன்பாணியில் குழைத்தெடுத்த கற்கண்டுத் துண்டங்களாக ஒவ்வொரு குறும்பாக்களும் இனித்தன. பெரும்பாலான கவிதைகளில் ஹைக்கூவின் விதிகள், பண்புகள் கண்டு வியந்தேன். இது மிகை இல்லை.

அனைத்து கவிதைகளையும் நயந்தேன், வியந்தேன் கவிதைக்குள் கரைந்தேன் கவிழ்ந்தேன் கற்றுணர்ந்தேன். நயந்துரை தர விழைந்தேன். வாருங்கள் வாசகர்களே அவற்றை ரசித்து சுவைப்போம்.

நயந்தவைகளில் சில...

குளத்தில் நிறையும் வெள்ளம்
மூழ்கும் அபாயத்தில்
தாமரை மலர்கள்

இயற்கையும் மரங்களும் செடிகளும் மனதில் பூரிப்பை ஏற்படுத்துகின்ற இயல்பைக் கொண்

டவை. கவிஞர் இயற்கையுடன் ஒன்றி இந்தக் கவிதையைப் புனைந்து இருக்கிறார்.

முதல் இரு வரிகளில் குளத்தில் யாரோ, எவரோ, எந்த உயிரினமோ மூழ்கப் போகிறது, உயிர் விடப் போகிறது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அங்கே அவர் தாமரை மலர்கள் மூழ்குவது குறித்து அச்சப்படுவது உண்மையில் அழகியல் அச்சச்சோ. குளத்தில் நீர் நிறைந்து விட்டது. தாமரை மலர்கள் மூழ்கிப் போகுமே.. இந்த அழகிய காட்சி, இயற்கையின் பரிசு காணாமல் போய்விடுமே என்று கவிஞர் கவலைப்படுவது நமக்குத் தெளிவாகிறது.

படிப்பதும் பட்டங்கள் பெறுவதும் மகத்தான ஒரு விடயம். இவ்வளவு கஷ்டப்பட்டு படிப்பது எதற்காக? வாழ்க்கையில் ஒரு நல்ல வேலையை பெற்றுக் கொள்வதற்காக. ஆனால் இந்த கவிதையைக் கவனியுங்கள். சமகாலச் சூழலில் மனிதர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை மூன்று வரிக்குள் அடக்கி இருக்கிறார் கவிஞர்.

**வேலையில்லாப் பட்டதா**
**வாழ்க்கைச் சுமையோடு போராடும்**
**வாங்கிய தங்கப்பதக்கம்**

வாங்கிய தங்கப்பதக்கம் பயனின்றி அங்கே இருக்கிறது பட்டதாரிக்கு வேலை இல்லை. பட்டம் தந்த தங்கப்பதக்கம் வாழ்க்கைச் சுமையை குறைப்பதாக இல்லை. தங்கப்பதக்கத்துக்கு பதிலாக பணமுடிச்சொன்றை அவருக்கு வழங்கியிருக்கலாமோ? நெருடலான ஒரு கவிதை.

**தொடர் மழை**
**நிரம்பி வழிகிறது**
**ஏழையின் குடிசை**

மழை வந்தால் மகிழ்ச்சி. மழை வந்தால் வரும் மண்வாசத்தில் கிளர்ச்சி. ஆனால் மழையினால் அனைவருக்கும் சந்தோசம் கிடைக்கிறதா? இல்லை என்றுதானே உரைப்பீர்கள். மழை வந்ததும் யாது நிரம்பி வழிகிறது? ஆறு குளம் குட்டை நிரம்பி வழிகிறதோ? என்றெல்லாம் நாம் யோசிக்கலாம். ஆனால் கவிஞர் மூன்றாவது வரியில் திடுக்கிட வைக்கிறார். ஏழைகள் படும் கஷ்டத்தை அவர் நாசூக்காக உரைக்கிறார்.

**வீறிட்டழும் குழந்தை**
**ஜன்னல் கம்பியைப் பற்றிய படி அடுத்த**
**வீட்டில் முதிர்கன்னி**

இந்தக் கவிதையை பார்க்கும் போது குழந்தை ஜன்னல் கம்பியைப் பற்றியபடி வீறிட்டு அழுகிறது. சிலவேளை அது ஜன்னலுக்கு வெளியே பயத்தை ஏற்படுத்தக்கூடிய காட்சியை கண்டிருக்கலாம். அல்லது தாய் தகப்பன் யாராவது அவளை விட்டுப் பிரிந்து சென்றிருக்கலாம். அதற்காக

அழுகிறாள் என்று நினைக்கிறோம். ஆனால் ஈற்றடியில் மனம் பதைப் பதைக்கிறது. ஏனெனில் வீறிட்டழும் குழந்தையின் சத்தத்தை கேட்டு ஜன்னல் கம்பியை பற்றியபடி நிற்கும் ஒரு முதிர்கன்னியின் முகம் எம் மனக்கண் முன் எழுகிறது. எவ்வளவு சோகமான ஒரு காட்சி.

முதிர்மாதவள் மணத்திற்கும் குழந்தைக்கும் ஏங்குபவள், ஒரு குழந்தையழும் சத்தத்தில் அதிர்ந்து ஜன்னல் வழி அக்குழந்தையைப் பார்க்க விழையும் காட்சி உண்மை யிலேயே நெகிழ்ச்சியை ஏற்படுத்திச் செல்வதைக் காணலாம்.

வண்ணங்களை பரிசளித்து
தப்பி செல்கிறது
கையில் இருந்து பட்டாம்பூச்சி

இக்கவிதையானது அடிப்படையில் ஒரு காட்சி படிமமாக இருக்கிறது. ஆனால் உள்ளார்ந்து நோக்குகையில் ஒரு ஜென் தத்துவத்தை உரைத்துச் செல்கிறது. பட்டாம்பூச்சியின் சிறகு களைப் பிடிக்கும் போது அது தன் வண்ணங்களை கையில் உதிர்த்து விட்டு பறந்து சென்று விடுகிறது. இதுதான் அந்த காட்சி. ஆனால் அது சொல்ல வருவது வாழ்வென்பது ஒரு முறை. அது பல வண்ணங்களோடு நம்மை வந்தடையும். அதன் வண்ணங்களில் இன்பம் சுகித்து அதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கால ஓட்டத்தில் அது நம்மை விட்டுப் பிரிந்து விடும் என்பதை உணர்த்துவதாகவும் இக்கவிதை இருக்கிறது.

தூரிகை வரையும் மின்மினிகளை எமக்குத் தந்த கவிதாயினி ஹைக்கூ கவிதைகளில் விதிமுறைகளையும் வரம்புகளையும் மீறாமல் அதைப் பிரியவாறு மின்மினிகளின் காட்டில் அழகாக பயணம் செய்திருக்கிறார்

இன்னும் நான் ரசித்த சில கவிதைகளை வாசகர்களாகிய உங்க ளின் எண்ணப் பறவைக்கு விருந்தாக விட்டுச் செல்கிறேன்.

பரந்தகடல்
பயப்படவில்லை
சின்ன பறவை

பனியில் நனையாமல்
பச்சை குல்லாய் அணிந்தபடி
மலைத்தொடர்கள்

முரட்டுத் தோற்றம்
கிராமத்தில் அதிகமாக
வெள்ளந்தி அன்பு

அதிகாலை கிளம்பும் அப்பா
பின்னிரவில் வருகையில்
தூங்கிவிடும் குழந்தை

வானுயரக் கட்டடங்கள்
அப்பப்பா மூச்சுமுட்டுகிறது
காடுகளை அழித்ததால்

ஆடும் ஊஞ்சலில் சிறுமி
வருவதும் போவதுமாய்
நீல வானம்

இவரது ஹைக்கூ கவிதைகளில்

பிரமித்து நயந்த விடயம் விதி மீறாமையும் விதியேற்பும்தான். ஒவ்வொரு கவிதையிலும் ஈற்றடி திருப்பமானது வெகு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு வரிகளுக்குமான பொருளை உணர்த்துவது ஈற்றடி திருப்பம்தான். இதுவே ஹைக்கூ கவிதைகளின் சிறப்பியல்பு, உயிர் நாடி என்று ஹைக்கூவில் கரைந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு ஏராளமான காத்திரமான கருத்துக்களுடன் இவரது ஹைக்கூ கவிதைகள் மிளிர்கின்றன.எதை எடுப்பது எதைத் தவிர்ப்பது என்று பெரிய திண் டாட்டம் எனக்குள் .

மேற்சொன்ன கவிதைகள் யாவும் கவிஞரின் கெட்டிக்காரத்தனத்திற்கு போதுமானவை. அவருடைய கவிதைகளில் மேலும் சில சிறப்பு நயப்புகளாக கருத்துப் புலப்பாடு, உள்வாங்கல் திறன், மென்சொல்லாடல், சொல் லளவு, சொற்பிரயோகம், நேர்த்தி, எளிமையான கையாளுகை என்பன மிகவும் அழகு.

பெரும்பாலான கவிதைகள் சமகால பிரச்சினையை மொத்தமாக பேசுகின்றன. எண்ணம் போன போக்கில் ஒரு கவிதையும் எழுதப்படவில்லை. கண்டது உள்ளுணர்ந்தது அனுபவித்தது அவதானித்தது அனுமானித்தது இயற்கை, நகைச்சுவை, சமூகப் பிறழ்வு, குழந்தை தொழிலாளர், வறுமை, பாசம், அன்பு என உலகியலில் இடம்பெறும் அத்தனை விடயங்களையும் கருவாக்கி உருவாக்கி கவியாக்கி நம் கண் முன் கண்ணாடியாக்கி இருக்கிறார் கவிஞர்.

மூன்று வரிகளுக்குள் முழு பிரபஞ்சத்தையும் குறுகி புகுத்த முடியும் என்பதை முடிந்த முடிவாகத் தந்திருக்கிறார் கவிஞர். பல கவிதைகளில் மானிட வாழ்விற்கான பல செய்திகள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஹைக்கூ நுட்பங்கள் கவிதைகளுக்குள் நுழைக்கப்பட்டுள்ளன. ஹைக்கூ கவிதைகள் தமிழ் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியாக, உயர்ச்சியாக இலக்கிய உலகால் ஓம்பப்படும் என்று நம்புகிறேன். கவிஞரின் ஆளுமை, ஆற்றல், திறமை, கடின உழைப்பின் மூலம் வெளியிடப்பட்ட 'தூரிகை வரையும் மின்மினிகள்' மூலம் ஏறாவூர் பிரதேசத்தை இமயமாய் உயர்த்தி நிற்கிறது என்பது எனது திண்ணமான எண்ணம். என்று உரைத்து எனது நயத்துக்கு திரையி டுகிறேன்.

**இந்நூலின் பக்கங்கள் 196**


**தொடர்புக்கு**

Dr. ஜலீலா முஸம்மில்<br>
80/2, ஓட்டுப் பள்ளி வீதி<br>
ஏறாவூர்-06<br>
jaleelamuzammil@gmail.com<br>
+94771308495

# சொல்லடி தோழி

கனவொன்று கண்டேன் தோழி
காற்றினில் பறந்து
கவலைகள் மறந்து
களிப்பினில் இருக்க நனவாகுமா
சொல்லடி தோழி

சின்னஞ்சிறு சிட்டாய்
சிரித்து மகிழ்ந்திட வேண்டும்
எண்ணமெல்லாம் ஈடேறி
இருட்டு வாழ்க்கை மறைய வேண்டும்
எனது கனவுகள் கனிந்திடுமா
சொல்லடி தோழி

துயரெல்லாம் தூர விலக
அயராத என் முயற்சிகள்
முழுதாய் நிலைபெற
ஒளிக்கதிர்களாய் எனைத் தழுவும்
விடியலொன்று நோக்கிடுமா
சொல்லடி தோழி

மண்ணுக்குள் புதைந்த விதையாய்
மனதுக்குள் புதைத்து வைத்தேன்
துளிர் விட்டு நாளை விருட்சமாய்
எழுந்து பலன் தருமா
சொல்லடி தோழி

விண்ணளவு ஆசை
விடை தேடி அலைகிறேன்
மனதினுள்ளே
கண்ணை மூடினால்
கனவினில் மட்டுமே
களித்திட முடியும்
கண்திறந்து நான் நோக்கும்
விடியலொன்று வருமா
சொல்லடி தோழி

நாடியதெல்லாம் நடந்திட வேண்டும்
தேடியதெல்லாம் கிடைத்திட வேண்டும்
மூடிய கதவுகள்
திறந்திட வேண்டும்
என் கனவுகள் பலித்திடுமா
சொல்லடி தோழி

**- லரீபா பதுர்தீன்**





# புவி உயிர்ப்பின் அரண்

**நெல்லை.க.சோமசுந்தரி,**
(கவிஞர், எழுத்தாளர், தொல்லியல் ஆர்வலர்) தமிழ்நாடு, இந்தியா

புவியின் தோற்றமானது, இன்றைய நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கோட்பாடுகளின் படி, அதன் கால அளவீடானது கணிக்கப்பட்டிருப்பினும் அத்தோற்றத்தின் மூலக்காரணிகளானது இன்றும் ஒரு கருதுகோளாகவே வரையறுக்கப்பட்டுள்ளது.



அக்கோட்பாட்டின் படி, புவியானது தோராயமாகப் பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகக் கருதப்படுகின்றது. புவியில் உயிர்களின் தோற்றமானது, புவித் தோற்றத்தின் கால அளவினைக் கொண்டு கணிக்கும் போது, பல நூறு மில்லியன் வருடங்களுக்குப் பின்பு தான் தோன்றியிருக்க வேண்டும். அவ்வகையில் இப்பூமிப் பந்தில் வாழும் வெவ்வேறு உயிரினங்கள் பல்வேறு விதமான பரிணாம வளர்ச்சியின் காரணமாகப் பல கால கட்டங்களில் படிப்படியாக உருமாறி மனித மற்றும் விலங்கின ஜீவராசிகள், இன்றிலிருந்து சில மில்லியன் வருடங் களுக்கு முன்புதான் தோன்றியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

புவியின் உயிர்ப்பானது அதில் வாழும் அனைத்து ஜீவராசிகளையும் உள்ளடக்கியது. அவ்வகையில் தாவரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களையும் புவியின் மேற் பரப்பானது தன்னுள் தாங்கி,

அதன் உயிர்ப்பு தன்மையை உறுதியாக்குகிறது. இந்தப் பூமியின் மேற் பரப்பிலிருந்து 10 கி.மீ முதல் ஏறத் தாழ 50 கி.மீ வரைப் புவியின் கவசமாக ஓசோன் என்கிற வாயு நிறைந்த அடுக்கானது பூமியில் வாழும் அனைத்து விதமான உயிர்களையும், சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்களின் எதிர்மறைத் தாக்கதிலிருந்து பாதுகாத்து வருகிறது. சூரியனின் புற ஊதா கதிர்வீச்சானது புவியின் மேற்பரப்பில் பரவியுள்ள வளிமண்டல ஆக்சிஜன் மீது வேதிவினைத் தாக்கம் புரிவதால், ஆக்சிஜனின் அணுக்கள் பிரிக்கப்பட்டு, அவ்வணுக்கள் வளிமண்டலத்தில் உள்ள புதிய வேறு ஆக்சிஜனுடன் சேர்ந்து ஓசோன் வாயுவாக ($O_3$) மாறுகிறது. இது ஒரு படலம் போலப் பூமி கிரகத்தின் மேற்பரப்பில் சூழ்ந்து காணப்படுகிறது. இதனையே நாம் ஓசோன் படலம் என்று அழைக்கிறோம். இந்த ஓசோன் படலமே புவியின் அரணாக இயற்கை நமக்கு அளித்த கொடையாக இருக்கிறது. இந்த அரணானது இன்றைய நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படும் குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டிகளால் வெளியேற்றப்படும் பசுமை இல்ல வாயுக்களான குளோரோ புளோரோ கார்பன் CFC கார்பன்- டை- ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்களினால் ஓசோன் படலமானது பாதிப்புக்குள்ளாகி சிதிலமடைந்து வருகிறது. இதனையே ஓசோன் துளை என்று அறியப்படுகிறது.

இந்த ஓசோன் துளையானது, 1980 ஆம் ஆண்டில் அண்டார்டிக்காவில் மிகப்பெரிய அளவில் கண்டறியப்பட்டது. இத்துளையினால், சூரியனின் கதிர்வீச்சு தாக்கத்தினால் புவியின் வெப்பநிலை உயர்ந்து, அண்டார்டிக் காவில் உள்ள பனிப்பாறைகள் உருகி, கடலின் நீர்மட்டம் உயர்கிறது. இந்நிகழ்வானது தொடர்ந்தால் பல நிலப்பரப்புகள் கடலினுள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், இதே போன்ற துளைகள் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற இடங்களிலும் கண்டறியப்பட்டன. அவ் வகையில் ஓசோன் துளை அதிகரிப்பால், அதிகமான புற ஊதா கதிர்கள் பூமியை வந்தடைவதால் மனிதர்களுக்குத் தோல் புற்றுநோய், கண் பார்வைக் குறைபாடு, நோய் எதிர்ப்பு மண்டலம் செயலிழப்பு மற்றும் மரபணு மாற்றம் போன்ற பாதிப்புகள் ஏற்படும். இப் பாதிப்புகளின் தீவிரத் தன்மையை நோக்கும்போது மனித இனமே புவியிலிருந்து அழிந்து விடும் அபாயத்தினைக் கொண்டுள்ளது. மேலும், புவியில் உள்ள அனைத்துத் தாவரங்களின் பச்சையங்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் இல்லாமல், தாவர இனமே அழியும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. இவை மட்டுமின்றி நீர் மற்றும் நிலத்தில் வாழும் விலங்குகளும் இறக்க நேரிடும். அதன் வழியே, இப்புவியில் உயிர்ப்பானது மெல்ல மெல்ல இழப்பை நோக்கி நகரும்.

இதனைக் கருத்தில் கொண்டு இப் பேரழிவைத் தடுக்கும் வகையிலும் இப்பூமிப்பந்தில் வாழும் அனைத்து ஜீவராசிகளையும் பாதுகாக்கும் பொருட்டு, 16 செப்டம்பர் 1987 ஆம் ஆண்டு ஐநா சபையானது மாண்ட்ரீல் (Montreal) நெறிமுறையை வகுத்து அதனை ஐ.நா. சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் பயனாக ஓசோனின் துளையானது, சிறிது சிறிதாகச் சரியாகி இன்று, அத்துளையினால் ஏற்படும் பாதிப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செப்டம்பர் 16 ஆம் தேதியானது 'சர்வதேச ஓசோன் தினமாக' ஐ.நா சபை 1994 ஆம் வருடம் அறிவித்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 16ஆம் நாள் ஓசோன் தினத்தன்று ஓசோன் துளையின் பாதிப்புகளையும், அதனை மீட்டெடுக்கும் வழிமுறைகளையும் அனைத்து மக்களிடமும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில், பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மாண்ட்ரீல் ஒப்பந்தத்தின் படி, ஓசோன் படலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பசுமை இல்ல வாயுக்களின் பயன்பாட்டினை மேலும் குறைக்கவும், 2050 ஆண்டிற்குள் அதனை 80லிருந்து 90 சதவீதம் முற்றிலும் அகற்றவும் நெறிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதனை அனைத்து விதமான உறுப்பு நாடுகளும் கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தமானது கிகாலி திருத்தம் என்றழைக்கப்படுகிறது.இந்த நெறிமுறையானது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால், ஓசோன் படலம் 2066ல் அண்டார்டிக்காவிலும் 2045ல் ஆர்டிக்கிலும், 2040ல் உலகின் பிறபகுதிகளிலும் 1980க்கு முன் இருந்த ஓசோன் படலத்தின் மதிப்புகளை மீட்டெடுக்கும் என்று சமீபத்திய அறிவியல் மதிப்பீடு ஒன்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஓசோன் படலமானது எவ்வாறு புவியில் வாழும் அனைத்து ஜீவராசிகளையும் ஒரு அரணாக இருந்து காப்பாற்றுகிறதோ, அவ்வழியே அதற்கு எவ்விதப் பாதிப்புமின்றி அந்த இயற்கையின் கொடையை மனித இனமானது பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு இப்பூவுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்ற பங்களிப்பை நல்க வேண்டும் அப்பொழுதே, புவியின் உயிர்ப்புத்தன்மை நிலைத்து நிற்பதோடு மட்டுமின்றி நமது வருங்கால சந்ததியினர் இயற்கையின் கொடையோடு பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏற்ற இடமாக இப்புவி அமையும் என்பதில் ஐயமில்லை. அதன் பொருட்டு இயற்கையின் அரணைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் உறுதி பூண வேண்டும்.

# எங்கே எமதிறைவன்?

.

விண்பார்த்துக் கையேந்தி இறைவா என்று
  விடுப்பன்றி கோரிக்குள் வணங்க வேண்டாம்
திண்ணம்தே வாலயத்தில் மெழுகை ஏற்றி
  தேரேற்றித் தேரேற்றித் திரிய வேண்டாம்
எண்ணியெண்ணிக் கைகூப்பி கோயில் உள்ளே
  இமைமூடி மறையோதி இளைக்க வேண்டாம்
உண்மைக்கு மாறாக உள்ளம் தன்னில்
  ஒவ்வொன்றாய்க் கனவாலே அடுக்க வேண்டாம்

.

இல்லாரை கைதூக்கி ஏற்றி விட்டால்
  ஏற்றத்தாழ் வன்றியெங்கும் பழகி விட்டால்
பொல்லாத சாதியினைப் பொசுக்கி நட்பாய்ப்
  பொதுநோக்கம் உடையவராய் இருந்து விட்டால்
தொல்லுலகில் நீவாழும் இடத்தைத் தேடி
  தொடர்ந்தருளைத் தருவதற்காய் உன்னை நாடி
எல்லாமும் நினைத்தபடி இகத்தில் சேர்க்க
  ஈடில்லா ஆண்டவனே வருவார் பாரீர்

தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்ஸ்



இம்முறை எமது முத்தமிழ் கலசத்தை அலங்கரிக்கும் ஆளுமை

# ஜே.எம். பாஸித்

பணிப்பாளர்: **Sky tamil News,** துணிந்தெழு சஞ்சிகை



இலங்கை சாய்ந்தமருது மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்ப கல்வியை சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலத்திலும் உயர்தரத்தை கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலும் பயின்றார். பாடசாலை காலத்திலிருந்தே டிஜிட்டல் மீடியாவில் அதீத ஆர்வம் கொண்டிருந்த இவர் பாடசாலைக் கல்வியின் பின்னர் தனது கவனத்தை முழுமையாக டிஜிட்டல் மீடியாவில் செலுத்தி, அதனூடாக தேர்ச்சி பெற்ற பல நிறுவனங்களில் வடிவமைப்பாளராக பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றுள்ளார். வடிவமைப்பு துறையில் சுமார் 10 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு.

இலங்கையில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருக்கும் நிறுவனங்களுக்கும் வடிவமைப்பாளராக இவர் செயற்பட்டுள்ளார். தொழிற்பயிற்சி நிலையத்தில் கம்பியூட்டர் கிராபிக்ஸ் டிசைனின் பயிற்சிப் போதனாசிரியராக பணிபுரியும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

இப் பயிற்சி நிலையத்தில் தாய் தந்தையை இழந்த பிள்ளைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் என சேர்க்கப்பட்டிருந்தனர். தேசிய ரீதியில் இடம் பெற்ற இளைஞர் மாநாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு பற்றியுள்ளார்.



இவ்வாறு கிராபிக்ஸ் துறையிலே நகர்ந்த தனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக ஊடகத் துறையில் இவரது பயணம் ஆரம்பித்துள்ளது. அதன் முதற்கட்டமாக வியூகம் முகநூல் ஊடகத்தில் பணிப்புரிந்துள்ளார்.

பின்னர் தனது வேலை வாய்ப்பிற்காக 2019 ஆம் ஆண்டு கட்டார் நாட்டை நோக்கி பயணமானார்.

தனக்கு ஊடகத்துறையில் ஏற்பட்ட ஆர்வம் கட்டார் நாட்டிலும் தனது ஊடகப் பயணத்தைத் தொடரத் தூண்டியது. ஆனால் இப்போது தனது சொந்த சமூக வலைதள ஊடகத்தை 2020 - கட்டார் நாட்டில் ஸ்கை தமிழ் எனும் பெயரில்உருவாக்கியுள்ளார். இந்த ஸ்கைத் தமிழ் எனும் சமூக வலைத்தளமே தற்போது பிரபல்யமாக காணப்படுகின்ற ஆளுமைகளை அடிப்படையாகக் கொண்ட துணிந்தெழு எனும் நேர்காணல் நிகழ்ச்சியையும், துணிந்தெழு சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது. இத் துணிந்தெழு சஞ்சிகையின் மூலம் பல இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதோடு அவர்களுக்கு எழுத்தாளர் என்ற அடையாளத்தையும் சமூகத்தில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இவரின் செயற்பாடுகள்

சிறுவயதில் இருந்து சமூகப் பணியில் ஆர்வமுடையவராக இருந்ததன் விளைவாக இளைஞர் கழகத்தின் தலைவராக இருந்த காலப்பகுதியில், பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலவசமாக பயிற்சி நூல், புத்தகப்பை என மாணவர்களின் சேவைக்கு அமைய பல உதவிகளை தொண்டு நிறுவனங்களின் ஊடாக பெற்றுக் கொடுத்துள்ளார்.

2022-ல் இலங்கையில் உள்ள குறிப்பிட்ட ஆளுமைகளை இனம் கண்டு துணிந்தெழு விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

அதன் பின்னர் கடந்த வருடம் இலங்கை மற்றும் இந்திய கத்தார் வாழ் ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக ஸ்கை தமிழ் விருது விழா கத்தாரில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இவ் வருடம் இலங்கையில் பல்துறை சார்ந்த ஆளுமைகளை தெரிவுசெய்து கௌரவிக்க உள்ளார்.

### ஊடகவியலாளராக சமூகத்துக்கு இவரின் பங்களிப்பு

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கான அங்கீகாரத்தை

பெற்றுக் கொடுக்க இலவச நூல் வெளியீடுகளை செய்து இதுவரை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் வெளியீட்டில் 15 நூல்கள் வெளியிடப் பட்டன.

அதே போன்று ஸ்கை தமிழ் ஊடக வழிகாட்டலில் இலவச ஊடக செயலமர்வுகளை பாடசாலை மாணவர்களுக்காக தமது ஊடகத்தின் ஊடாக நடத்தியுள்ளார்.

இன்னும் இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியா, கத்தார் ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் ஆளுமைகளை நேர்காணல் செய்து துணிந்தெழு சஞ்சிகை மூலம் வெளியிட்டு வருகின்றார்.

கவிஞர்கள் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பல போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து சான்றிதழ்கள், பரிசுகள் வழங்குதல் இவரது நெறிப்படுத்தலில் நடை பெற்றுள்ளது.

## துணிந்தெழு பற்றி

ஸ்கை தமிழ் ஊடகம் ஆரம்பித்து ஒரு வருடத்தின் பின்னர் துணிந்தெழு என்ற பேரில் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வந்த போது, அதில் பெண் ஆளுமைகளை இனங்கண்டு அவர்களை சமூகத்துக்கு வெளிக்கொண்டு வருவதே இவர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால் முகநூலில் பதிவிடும் காணொளி வெறும் பார்வையாளர்கள் மட்டுமே உள்ளடங்கலாக இருந்தது.

அதனால் இந்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது துணிந்தெழு சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர்.

அதில் முதலாவது பெண் ஆளுமையாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் தகவல் அதிகாரியும் சிரேஷ்ட ஊடக வியலாளருமான கலாபூணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்களை நேர்காணல் செய்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

துணிந்தெழு சஞ்சிகை பிரசுரிக்க ஆரம்பித்து சிறிது காலத்திலேயே பிரபல்யம் அடைந்ததால் கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் துணிந்தெழு சஞ்சிகை தொடர்பாக தனது தூதுவராலயத்தில் இவரை அழைத்து பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியா, மலேசியா, கத்தார், கனடா ஆகிய நாடுகளில் பிரபலங்களையும் நேர்காணல் செய்து துணிந்தெழு சஞ்சிகை மூலம் வெளியீட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. துணிந்தெழு சஞ்சிகை ஆரம்பிக்கப் பட்டு 3 வருடத்தில் 35 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதில் பெருமிதம் அடைகிறார்.

### இது வரை பெற்றுள்ள விருதுகள்

பிரித்தானிய நாட்டின் Edinberg பல்கலைக் கழகத்தினால் வழங்கப் படும் சர்வதேச 'வெண்கல' விருது 2017 இல் இவருக்குக் கிடைக்கப் பெற்றது.

அத்தோடு சமூக ஊடக, தொழில் நுட்ப, இதழியல் பணிகளைப் பாராட்டி வியூகம் ஊடக வலைய மைப்பினால் மறைந்த மூத்த ஒலி - ஒளிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஞாபகார்த்த விருது வழங்கப் பட்டது.

2022 இல் கட்டாரில் நடை பெற்ற பிரபல புகைப்படப் போட்டியில் இலங்கை சார்பாக இவருடைய புகைப்படமும் தெரிவு செய்யப் பட்டது.

கனடாவின் உலகளாவிய பல் கலைக்கழக சேவை (WUSC) பயிற்சி போதனாசிரியர் சேவையை பாராட் டியும் கௌரவிப்பு வழங்கப்பட்டது.





இந்திய தூதரகத்தால் அங்கீகரிக் கப்பட்ட கட்டார் தமிழர் சங்கத்தின் தமிழ் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் ஊடக பங்களிப்புக்கான விருது கிடைத்துள்ளது.

மற்றும் கத்தார் வெளிநாடு வாழ் தமிழ் இந்திய சங்கம் தமிழர் விழாவில் தி.மு.க மாணவர் அணி தலைவரினால் இலக்கியம் மற்றும் ஊடக சேவையை பாராட்டி விருது வழங்கி பொன்னாடை போர்த்தி இவர் கௌரவிக்கப்பட்டார்.

### முக்கிய நிகழ்வுகளில் இவரின் பங்களிப்பு

இந்த வருடம் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் அதிகாரப்பூர்வ ஊட கவியலாளராக அங்கீகாரம் கிடைத் தமை குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டு முழு உலகை யும் திரும்பிப் பார்க்க வைத்த கத்தார் பீஃபா உலகக்கோப்பை போட்டி 2023 AFC ஆசிய கோப்பை கால்பந்து போட்டி, 2024 உலக நீர் வாழ் சம்பியன்ஷிப் போட்டி, ஜெனீவா சர்வதேச மோட்டார்

கண்காட்சி மற்றும் உலகின் மிகப் பெரிய இணைய தொழில்நுட்ப மாநாடான 'Web Summit' இந்த மாநாட்டில் முதன் முறையாக இலங்கையர் என்ற வகையில் ஊடகவியலாளராக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. மேலும் பல சர்வதேச நிகழ்வுகளில் கலந்து கொள்ள வாய்ப்பும் தற்போது இவருக்கு கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற சர்வதேச நிகழ்வுகளில் இவர் மாத்திரமன்றி ஏனைய உறுப்பினர்களும் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கி வருகிறார்.

## முத்தமிழ் கலசம் பற்றி

புற்றீசல்கள் போல் பல சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் அதேநேரம் ஒரு சில சஞ்சிகைகள் வெளிவந்த உடனேயே காணாமல் போகும் இக்காலத்தில், பிரபல கவிதாயினியும் விமர்சகருமான வஃபீரா வஃபியை பிரதம ஆசிரியராக கொண்டு முத்தமிழ் கலசம் ஐந்து வருடங்களாக வீறு நடைபோடுவது வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்ட இவ் இதழ் ஆளுமை பாஸித், தன்னைப் பற்றிய விபரங்களை முத்தமிழ் கலசம் ஆளுமை அறிமுகப் பகுதியில் தொகுத்தளித்த Sri Lanka Pen Club செயலாளரும் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு உறுப்பினருமான ஷாமென் நிஸாம்டீன் அவர்களுக்கும் பிரதம ஆசிரியை வஃபிரா வஃபிக்கும் தன்னுடைய உளப்பூர்வமான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் இந்த ஊடகப் பயணத்தில் வெற்றிவாகை சூட முத்தமிழ் கலசம் சார்பாக நமது வாழ்த்துகளையும் மனமுவந்த நன்றிகளையும் சமர்ப்பிக்கிறோம்.

**தொகுப்பு:**
**ஷாமென் நிஸாம்டீன்**
Sri Lanka Pen Club
செயலாளர்
துணிந்தெழு ஆசிரியர் குழு




மக்கள் பணியே..! இறைப்பணி
வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம்
VVTNS BLOOD DONATION CAMP
03 MAY, 2024
VENUE : HMC - BLOOD DONOR CENTER
Media Partner
sky தமிழ் NEWS




AWARDS QATAR 2023
இலங்கை தமிழ் விருது - 2023





துணிங்தெழு
துணிங்தெழு விருது 2022
ரஞ்ஜனி ராஜ்மோகன்
www.skytamilmedia.com
skytamil.lk

# ONLINE
# ஆங்கில வகுப்பு
# SPOKEN ENGLISH

வேகமாக ஓடும் வாழ்க்கையில் எங்கு சென்றாலும்
தொடர்புகொள்ள ஆங்கிலம் அவசியமானது
என்று உணர்கிறீர்களா?
ஆங்கிலம் அறிந்திருந்தாலும் பேசுவதில் தயக்கம் உண்டா?
பேசுவது பிழையாகி விடுமோ என்ற பயம் இருக்கிறதா?

**உங்கள் பிரச்சினைகளைப் போக்கி ஆங்கிலம் பேச பயிற்சியளித்து தைரியம் தருகிறேன்.**



## Course Includes

- Grammer
- Speech
- Patterns
- Vocabulary
- Translation
- Sentence Making
- Speech Tips
- (Daily use Sentences)
- Practical

**Skills Insight**

Spoken English through Tamil

**Duration; 7-8 Months**

Contact: Whatsapp Ms. Akshi 0757544734

Higher Level in English - University of Colombo

பாடநெறி முடிவில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

9 772719 252001